சோவியத் பெண்



ஜனசக்தி வெளியீடு

சென்னை

ஜனசக்தி வெளியீடு நே. 17

சோவியத் பெண்

டி. ஸெரெப்ரென்னிகாவ்
எழுதியது.

★

மொழிபெயர்ப்பு:
தோழர் சுந்தரராஜன்

ஜனசக்தி பிரசுராலயம்
டேவிட்சன் தெரு, ஜி. டி., சென்னை

மார்ச்சு 1944] [விலை அணா 6

சென்னை "ஜனசக்தி" பிரஸில் பி. ராமமூர்த்தியால் அச்சிடப்பட்டு இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின், தமிழ் மாகாணக் கமிட்டியின் சார்பாகப் பிரசுரிக்கப்பட்டது.

பொருளடக்கம்

முன்னுரை

சோவியத் ஆட்சியில் பெண்களின் அந்தஸ்தே பிறநாடுகளைவிட முற்போக்கானது, ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக வளர்ந்து வாழ்வது ஒரு சமூகத்தின் முற்போக்கின் குணவிசேஷம். சமூகத்தின் அடிமைத் தனமும் சுரண்டலும் பெண்ணடிமையில்தான் முதன் முதலாக ஏற்பட்டது என்பது மார்க்ஸிஸ்ட் ஆராய்ச்சியின் முடிவு. சோவியத் சுதந்திர வாழ்வு, பெண்களை அடிமைத் தளைகளினின்று விடுவித்து ஓர் புதிய வாழ்வை சிருஷ்டித்துள்ளது.

சோவியத் வாழ்க்கையின் பல அம்சங்களைத் தெளிவாக எடுத்துரைக்கும் நூல்களை மாஸ்கோ பிரசுர கர்த்தாக்கள் வெளியிட்டிருக்கின்றனர். அவற்றுள் சோவியத் பெண் மணியைப் பற்றியது ஒன்ருகும்,

இந்த வெளியீடு மாஸ்கோவில் பிரசுரிக்கப்பட்ட அந்த நூலைத் தழுவி எழுதப்பட்டிருக்கின்றது. பெரும்பான்மை மூலநூலின் மொழிபெயர்ப்பேயாகும். புள்ளிவிவரங்கள் சம்பவங்கள் அதினின்று எடுக்கப்பட்டவை.

"மாதர் தம்மை அடிமை செய்யும் மடமையைப்" போக்கப்பாடுபடும் தமிழ்நாட்டு முற்போக்காளர்களுக்கு இந்த நூல் உதவி அளிக்கும் என்று நம்புகின்ருேம். தமிழ்நாட்டுப் பெண்களுக்கு தங்கள் சோவியத் சகோதரிகளின் வாழ்க்கை வளர்ச்சியை விளக்கி, தாங்களும் முன்னேறும் வழியை உணர்த்த இது உதவும்.

ஜனசக்தி பிரசுராலயம்

சோவியத் பெண்

சோவியத் பெண்களின் வாழ்க்கை நிலைமையைப் பற்றியும், ரஷ்ய நாட்டின் யுத்த முயற்சியில் ஈடுபட்டு அவர்கள் செய்துவரும் அரும்பெருஞ் சேவையைக் குறித்தும் இச்சிறிய நூல் கூறுகிறது. நாஜி வெறியர்களை தங்கள் நாட்டிலிருந்து விரட்டுவதற்காக சோவியத் மக்கள் ஜெர்மானியருடன் கடும்போர் புரிந்து வருகின்றனர். இக் கோர யுத்தத்தில் சோவியத் பெண்களின் தொண்டு பெருமையும், கீர்த்தியும் வாய்ந்துள்ளது. சமாதான காலத்தில் அவர்கள் நடத்தும் வாழ்க்கையும் மிக உன்னதமானதே.

I. ஜார் ஆட்சியின் கீழே

ஜார் காலத்திய ரஷ்யப் பெண்களின் இன்னல்கள் பல. நாள் ஒன்றுக்கு 12, 13 மணி வேலைநேரம்; கிடைக்கும் சம்பளமோ சில செப்புக்காசுகள். எவ்வித பிரஜா உரிமையுமில்லை, சட்டமோ அவர்களின் சத்ரு. ஒரு நாள்பொழுது கழிப்பதே திண்டாட்டம். எதிர்காலத்தின் போக்கு எவ்வாறிருக்குமென்று அவர்கள் அறியார்கள்.

ஹா! எல்லாம் அவர்களின் "தலைவிதி"யைப் பொறுத்தது. 'தலைவிதி'யில் சிக்கி தத்தளித்தனர். அக்காலத்திய ஸ்திரீகள் தாங்கள் கர்ப்பமாக இருப்பதை மறைத்துவைத்து வந்தனர். இவ்விஷயம் யஜமானனுக்குத் தெரிந்தால் வேலையிலிருந்து நீக்கிவிடுவான்! அவர்கள் குழந்தைகள் பெறுவது குடிசையில் அல்ல; தொழிற்சாலைகளில் உழைத்து வரும்பொழுதே குழந்தை தாயின் வயிற்றிலிருந்து வெளிவரும். மறுநாள் வழக்கம்போல் தனது

வேலைக்குச் சென்றுவிடுவாள் ஜார் காலத்திய ரஷ்யத்தாய். இப்பரிதாபக் காட்சி ஜார் நடத்திய நாடகத்தின் ஒரு ஸீன். தொழிலாளர் குழந்தைகளின் மூன்றில் ஒருபாகம் தங்களின் முதல் வயது பூர்த்தியடைவதற்கு முன்பே விண்ணுலகத்தையடைந்து வந்தன. முப்பது, நாற்பது வயதாகிவிட்டால் ஒரு ரஷ்ய ஸ்திரீயின் அலங்கோலத்தை என்னவென்று சொல்வது! உடம்பில் தோலும் எலும்பும்தான் மிச்சம். அவள் ஒரு நடைப்பிணம். இத்தகைய கோரக் காட்சியை ஜார் காலத்தில் ரஷ்யப் பட்டணங்களில் காண்பது சர்வ சாதாரணம்.

கிராமங்களிலோ பெண்கள் வாழ்க்கை மிகவும் மோசம்' எழுத்துவாசனை கிடையாது. நாள் முழுதும் ஓயாத வேலை. வீட்டிலோ கணவன் திட்டுவான், அடிப்பான். ஊழியம் செய்யுமிடத்திலோ எஜமானன் சீறிவிழுவான், சாட்டையை வீசுவான். அவர்கள் வாழ்க்கை அடிமை வாழ்க்கையே.

1917-க்குப் பின்

வெறுக்கத்தக்க இவ்வாழ்க்கை வேரூன்றிவிட்டது; ஆனால் 1917-ல் கடும்புயல் வீசி இந்த அடிமைவாழ்வை அடியுடன் பிடுங்கி எறிந்துவிட்டது. அதுதான் சோவியத் ரஷ்யப் புரட்சி. நவம்பர் 7-ல் உதயமாயிற்று இப்புரட்சி சூரியன்; ஜார் ஆட்சியின் காரிருள் மறைந்தது. ரஷ்யப் பெண்களின் அடிமைத்தளைகள் தகர்ந்தன; ரஷ்யப் பெண்ணுலகத்தில் சுதந்திரம் மலர்ந்தது. ஆண் மக்களுக்கு சரிநிகர்சமானமான வாழ்க்கையை எய்தினர் ரஷ்யப் பெண்கள். நாட்டின் அரசியல் துறையிலும் பொருளாதார புனருத்தாரணத் திட்டத்திலும் ஈடுபட்டனர். அவர்களின் சுதந்திரதாகம் தணிந்தது. மேலும் களிப்புடன் புதிதாகப் பெற்ற புத்துயிரின் பெருமையையும் அதன் காரணத்தையும் அறியலானர்

கள். இன்றைய யுத்தத்தில் அவர்கள்பால் காணப்படும் தீரத்திற்கும் மன உறுதிக்கும் இந்த ஞானமே இருப்பிடமாகும். சோவியத் சக்தியின் வாழ்வு தங்களது வாழ்வென்றும், அதன் வீழ்ச்சி தங்களது வீழ்ச்சியென்றும் ரஷ்யப் பெண்மணிகள் நன்கு அறிவார்கள்.

1905ல் நடந்த புரட்சியிலும் பெண்களின் தீரம் சொல்லற்பாலதன்று. பொது வேலைநிறுத்தங்களில் ஆயிரக்கணக்கில் பங்கெடுத்துக்கொண்டனர். தங்களது கணவர்களோடும் சகோதரர்களோடும் ஒத்துழைத்து, தெருச்சண்டைகளுக்குப் 'பாரிகேடுகள்' (கண்ட சாமான்களைக் குவித்து அமைக்கும் பாதுகாப்புச் சுவர்கள்) எழுப்பிப் போர்செய்தனர். தேசப் பிரஷ்டத்திற்கும் சிறைவாசத்திற்கும் அஞ்சவில்லை.

பூர்ஷுவா புரட்சி மார்ச்சு 1917ல் நாடெங்கும் பரவியது. அதுதான் பூர்ஷுவாக்களின் ஆட்சியைத் தருவித்தது. அச்சமயத்தில் அவர்கள் போரின் முன்னணியில் நின்று போராடியது மிகவும் பாராட்டத்தக்கது. மார்ச்சு 8ம் தேதி, அதாவது, "சர்வதேசப் பெண்கள் தின"த்தில், ஒரு பெரிய ஆர்ப்பாட்டம் செய்தனர். அந்த மாபெரும் ஊர்வலத்தில் தங்களது கணவர்கள் போர்க்களத்திலிருந்து வீடு திரும்பவேண்டுமென்றும், சமாதானம் நிலவவேண்டுமென்றும், சாப்பாட்டு வசதிகள் அளிக்கப்படவேண்டுமென்றும் தங்களது கோரிக்கைகளை வெளிப்படுத்தினர்.

மூன்றாவதாக, நவம்பர் 1917ல், நடந்த சோவியத் சோஷலிஸ்ட் புரட்சிக்காலத்தில் ரஷ்யப்பெண்கள், கிஸான்-தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆயுதம் தாங்கி வீரத்தோடு போர்க்களத்திற்குச் சென்றனர். தொழிற்சாலைகளை காத்துவந்தனர்; சோல்ஜர்களுக்கு ஆயுதங்கள் சப்ளைசெய்தனர்; 'ஸ்கௌட்' (சாரணர்) இயக்கத்தில் சேர்ந்தனர்; முதல் சிகிச்சை (First aid) பகுதிகளை ஸ்தாபித்தனர்.

4

சோஷலிஸ்ட்-முதலாளித்வப் போரில்

சோவியத் பெண்களின் தியாகத்திற்கும், சாமர்த்தியத்திற்கும் ஓர் எல்லையில்லை. 1918ல் ஜெர்மனி, பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், இதாலிய முதலிய முதலாளித்துவ நாடுகளும் ரஷ்யப் பிற்போக்காளர்களும் ஒன்று சேர்ந்து சோவியத் ரஷ்யாவைத் தாக்கினர். அப்பொழுது தேசியப் பொருளாதார நிலைமை சீர்குலைந்து, பஞ்சமும், பசியும், பிணியும் தாண்டவமாடின. இந்நெருக்கடியில் சோவியத் பெண்கள் தொழிற்சாலைகளில் தொண்டாற்றியும், சுரங்கவேலையில் சுறுசுறுப்பாக சேவைசெய்தும், ரயில்வேக்களில் அல்லும் பகலும் உழைத்தும் செஞ்சேனைக்கு வெற்றி அளித்தனர். யுத்தகளத்தில் மாண்டவர்களை அப்புறப்படுத்தியும், பீரங்கி சுடும் தொழிலில் ஈடுபட்டும், சாதாரண சோல்ஜர்களாகச் சேர்ந்தும், தங்கள் தேசக்கடமையை நிறைவேற்றினர். முக்கியமாக, ஜெர்மனியை நார்வா நகரத்தில் முறியடித்தபோது அவர்கள் வீராவேசத்துடன் போராடியது குறிப்பிடத்தக்க விஷயமாகும். ஏனென்றால் இவ்விடத்தில் ஜெர்மனி வெற்றி பெற்றிருக்குமானால் லெனின்கிராட் வீழ்ச்சியடைந்திருக்கும்.

அக்டோபர் 1919ல் ஆயிரக்கணக்கான பெண்கள் ஆயுதம் தாங்கி, அணிவகுத்துநின்று லெனின்கிராடைக் காப்பாற்றிய காட்சி அவர்களின் வீரசக்திக்கு ஓர்சிறந்த உதாரணமாகும். 2,650 பெண் தொழிலாளர்கள் ராணுவப்பயிற்சிபெற்று யுத்தகளத்திற்கு விரைந்தனர். சுமார் 12,000 தொழிலாளர் ஸ்திரீகள் டிரெஞ்சுகள் (போர்க்களத்தில் வெட்டப்படும் பாதுகாப்புக்குழிகள்) வெட்டுவதற்கும் மற்ற சில்லரைவேலை செய்வதற்கும் புறப்பட்டனர். தந்தி, தபால் ஆபீசுகளையும், தொழிற்சாலைகளையும் அவர்களே நடத்திவந்தனர். பாலங்

களைக் காப்பாற்றிவந்தனர். இவ்விதமாக பலவிதங்களில் பாடுபட்டு பணியாற்றி, பெட்ரோகிராடை (தற்கால லெனின் கிராட்) பாதுகாத்துவந்தனர். சத்ருக்களிடம் சிக்கிய சோவியத் பெண்கள் சித்ரவதை செய்யப்பட்டனர்; கற்பழிக்கப்பட்டனர். இருந்தாலும் இக்கொடிய கஷ்டங்கள் அவர்கள் தங்களது கடமையை நிறைவேற்றுவதிலிருந்து தடுக்க முடியவில்லை. அவர்கள் வீர ரத்னங்களாக விளங்கினரென்று கூறுவது மிகையாகாது.

உதாரணமாக நர்ஸ் பாலண்டினைவை எடுத்துக்கொள்வோம். இவள் ஒரு பாட்டாளி. 1918 முதல் 1921 வரையில் நடந்த முதலாளி-சோவியத் போர்க் காலத்தில் நர்ஸாக உழைத்தும் பிரசாரஞ் செய்தும் செஞ்சேனைக்கு உதவி செய்து வந்தாள். கிழக்குப் போர்முனைக்கு சென்றிருந்த பொழுது அங்கு சத்ருக்களால் சிறைப்படுத்தப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டாள். ஆனால், சுடப்படு மிடத்திற்கு அழைத்துச் செல்லப்படும்பொழுது அவளது காவலாளிகளை செஞ்சேனையில் சேரும்படி தூண்டி, அவர்களுடன் ஜாக்கிரதையாகத் தப்பிவிட்டாள். இதன்பின் இஷிம் (Ishim) என்றவிடத்தில் இவள் உதவிவந்த ஒரு சிறு குருப்புக் கூட்டத்தினரும் இவளும் விரோதிகளால் சூழ்ந்து கொள்ளப்பட்டனர். சற்று யோசித்தாள்: தங்களது சகாக்களுடன் மின்னல்போல் பாய்ந்தாள்; சத்ருக்களை சிதறடித்தாள் இவ்வீரப் பெண்மணி. 1920-ல் மேற்குமுனைக்கு மாற்றப்பட்டாள், அங்கு பீரங்கி அதிர்ச்சியினால் அவளுக்கு தேக ஆரோக்கியம் குன்றிவிட்டது. அப்படியிருந்தும், யுத்தம் முடியும் வரையில் பட்டாளத்தைவிட்டு விலகவில்லை.

மற்றப் பெண்களின் தியாகம் பாலண்டினுவின் தியாகத்திற்கு எவ்விதத்திலும் குறைந்ததாக இல்லை. ஒடெஸ்ஸாவில் 1920-ல் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தைச் சேர்ந்த ஒன்

பது பெண்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களில் ஐடா (Ida), டோரா (Dora) என்ற இரு யுவதிகள். சில சோவியத் விஷயங்களை அறியும் பொருட்டு எதிரிகள் அவர்களை சித்ரவதை செய்து, மானபங்கம் செய்தனர். இவ்வளவுக்கும் அவர்கள் அசைசயவில்லை. குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பொழுதும் அவர்கள் சோவியத் ரகஸியங்களை வெளியிடவில்லை. மரண தண்டனையை முக மலர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர்.

"பிராஸிகூஷன் தரப்பினுல் எங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் 'குற்றங்கள்' உண்மைதான். அவைகளின் பலாபலன்களை அறிந்தே நாங்கள் அவற்றைச் செய்தோம். அதற்காக நாங்கள் களிப்படைகிறோம். நாங்கள் எடுத்தகாரியம் வெற்றியடையுமென்பது திண்ணம்."

இவ்வீர மொழிகளே அவர்களது வாக்கு மூலம். சாகும் சமயத்தில் தனது சுற்றத்தாருக்கும், மூத்த சகோதரிக்கும் ஐடா எழுதிய கடிதத்தை கவனித்துக் கேளுங்கள் :—

"எனது அன்புள்ள சுற்றத்தினரே ! நான் இன்னும் 24 மணி நேரத்தில் தூக்கு மேடை ஏற வேண்டும். என் கடமையைச் செய்ததற்காக நான் இறப்பதைக் குறித்து சந்தோஷப்படுகிறேன். ஆனால் ஒரு விஷயத்தைப்பற்றி வருத்தம்; அது, நான் சாதித்தவை மிகக் குறைவு என்பதற்காகத்தான். நாங்கள் சந்தோஷமாகவும், சாந்தி ததும்பும் மனதுடனும் இருக்கின்றோம். பாட்டுகள் பாடியும், அரசியல் பிரச்னைகளை பரிசீலனை செய்தும் காலத்தைக் கழிக்கின்றோம். எனக்கு வயது இருபதுதான்; ஆனால் கடந்த சில நாட்களில் எனக்குக் கிடைத்த அனுபவம் நான் 200 வருடங்கள் வசித்திருந்தாலும் கிட்டிராது.

"எனது அன்புள்ள சகோதரியே, எனக்காக நீ துக்கப்படாதே. அம்மாவுக்கு சமாதானம் சொல்லவும். நான் சாதிக்காதவற்றை உன் சிறிய மகன் செய்வானாக. ஒரே வொரு வேண்டுகோள்—நான் பரலோகம் போவதைப் பொறுமையுடன் பொறுப்பாயாக.

"வணக்கம்"

இப்படிக்கு,

ஐடா.

ஐடாவின் தியாகமும், டோராவின் வீரச் சாவும், பாலண்டினுவின் சுயநலமற்ற வாழ்க்கையும் வீண் போகவில்லை, நகரங்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான பெண்கள் முன்வந்து தொண்டாற்றி, சோவியத் சோஷலிஸ்ட் புரட்சி நீடூழி வாழவேண்டுமென்பதற்காகவே இத்தகைய தேசபக்தி ததும்பும் தாய்மார்களின் வயிற்றில் தோன்றிய பரம்பரையினரே இன்றைய சோவியத் மாதர்கள். தியாகமென்ற அக்னியில் பதஞ் செய்யப்பட்ட பொன் போன்ற இப்பெண்மணிகள்தான் இன்று பாஸிஸ்ட் பேய்களை பலிசெய்து, உலகப் பாட்டாளிகளை பாதுகாக்கின்றனர்.

II. ராஜீயத் துறையில்

பெண்கள் அந்தஸ்தில் ஸோவியத் சக்தி புரட்சிகரமான மாறுதல்களை உண்டாக்கியிருக்கிறது. ஸோவியத் யூனியனில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும்

ஆண்களுக்குள்ள வசதிகள் பெண்களுக்குமுண்டு. எல்லா உத்தியோகங்களுக்கும் பெண்கள் போகலாம்; சகல வியாபாரங்களிலும் ஈடுபடலாம். ஒரே அளவும், தன்மையும் வாய்ந்த ஒரு குறிப்பிட்ட ஊழியத்தைச் செய்த ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே சம்பளந்தான். "அடுப்பங்கரையில் வேலை செய்துவரும் ஒவ்வொரு பெண்ணும் அரசாளும் ஆற்றலை அடையவேண்டும்" என்று சொன்னார் வீர லெனின். ஆதலால் பெரும்பான்மையான பெண்களை அரசியல் வாழ்வில் ஈடுபடும்படி செய்வது சோவியத் ஆட்சியின் கடமையாயிற்று.

தொழிற்சாலைகளும், வயல்களும், சர்க்கார் ஆபீஸ்களும் ஸோவியத் சபைகளும் பெண்களின் பாடசாலைகளாக விளங்கின.

சட்டசபைகளில்

1939ல் நடந்த பொதுத் தேர்தலில் 4,57,000 பெண்கள் ஜில்லா, தாலுக்கா, கிராம, நகர சோவியத் சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1480 நபர்கள் சமஷ்டியில் சேர்ந்துள்ள குடியரசுகளின் சட்டசபைக்கும் 227 பேர் மத்திய சோவியத் சோஷலிஸ்டு குடியரசில் சட்டசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் நாட்டில் நன்குமதிக்கப்பட்டு போற்றப்படுகின்றனர். தேசம் இவர்களின் தியாகத்தையும், தேசபக்தியையும் நன்கறியும்.

உதாரணமாக ப்ராஸ்கோவியா (Praskovya) வின் சரித்திரத்தை கவனிப்போம்.

இம்மாது இன்று ஒரு அகில யூனியன் சோவியத்தின் சட்டசபை அங்கத்தினர். இவர் ஜார் அட்டூழியத்தினல் அவதிப்பட்டவர். இவரது தகப்பனர் பெட்ரோகிராடில் ப்யூன்

வேலைபார்த்து வந்தார். ப்ராஸ்கோவியாவின் குழந்தைப் பருவம் பட்டினியாலும், பிணியாலும் பீடிக்கப்பட்டது. குடிசையிலோ காரிருள். சூர்ய வெளிச்சமே கிடையாது. குடிசையில் ஒரே ஈரம். அக்கம்பக்கங்களில் ஆயிரம்பேர். ஒரே கூட்டம். நல்ல காற்றுகிடையாது. நாள் முழுவதும் சாப்பாட்டுக் கவலை. கஷ்டம் முற்றிற்று. ஆகவே நகரத்தை விட்டு கிராமத்துக்குச் சென்றனர் இவளது பெற்றோர்கள். அங்கு முதலில் மாடுமேய்த்துவந்தாள் நமது வீரப்பெண்மணி. பிறகு ரயில்வேயில் அவளுக்கு ஒரு வேலைகிடைத்தது. சிறிது நாட்களுக்குள் கிராமத்தில் ஒரு பெரிய தீ உண்டாயிற்று. கிராமம் அழிந்தது, இவளது பெற்றோர்களும் மடிந்தனர். ஜார் காலத்தில் கிராமங்கள் தீப்பற்றி எரிவது சர்வ சாதாரணம்.

நவம்பர் புரட்சி காலத்தில் தேசமக்களுக்குக் கண் விழிப்பு உண்டாயிற்று. அதில் நமது ப்ராஸ்கோவியாவும் கலந்துகொண்டாள். கிராமத்தின் தலைவியானாள். சோவியத் சபையில் கிராமப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டாள். கிராம மக்களுக்குக் கல்வி போதித்தும், கிண்டர்கார்டன்கள் (குழந்தைகளுக்கு விளையாட்டுப் பள்ளிக்கூடங்கள்) அமைத்தும் சேவை செய்துவந்தாள்.

1929-ல் மாஸ்கோவிற்குத் தனது குடும்பத்துடன் சென்று ஒரு பெரிய தொழிற்சாலையில் வேலைக்கு அமர்ந்தாள். தனது தொழிலுக்கு அவசியமான உயர்தர தொழில் கல்வி கற்று முக்கிய உத்தியோகம் பெற்றாள். செல்வாக்கு அதிகமாகவே, அம்மாது மாஸ்கோ ஸோவியத் சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். பிறகு மாஸ்கோ நகரத்தின் ஒரு பகுதியாகிய தாகாங்கா(Takanka) ஜில்லாவின் (சுமார் $2\frac{1}{2}$ லட்சம் ஜனத்தொகையுள்ளது) தொழிலாளர் ஸோவியத் சபையில் அக்கிராசனராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

1937-ல் நடந்த தேர்தலில் ஸோவியத்யூனியனின் அகில யூனி யன் சட்ட சபையில் இவருக்கு ஒரு ஸ்தானமும் கிடைத்தது.

பரஸ்கோவியாவைப்போல் பல மாதர்கள் ஸோவியத் அரசாங்கத்தில் முக்கிய ஸ்தானங்கள் வகித்து ஜனங்களின் தலைவிகளாகத் திகழ்கின்றனர். ஸி. ஆஸ்லனேவா மத்ய சட்ட சபை உப அக்கிராசனராகவும், காரண்ட்ஷாயவா (Karandzhayeva) தருக்மானியன் மாகாணத்தில் நீதி இலாகா மந்திரியாகவும் (Peoples' Commissar for Justice) சேவை புரிந்து சோவியத் பெண்ணுலகத்தின் மாணிக்கங்களாகப் பிரகாசிக்கின்றனர். ஜார் காலத்தில் இவர்களின் நிலைமை மிகவும் மோசமா யிருந்தது. உதாரண மாக கரேக் (N. Grek) தனது 10வது வயதிலேயே பன்றி களை மேய்த்து ஜீவனஞ் செய்பத் தொடங்கினாள். ஒருநாள் ஒரு பன்றி வழி தவறி காணமற் போய்விட்டது. அதற்காக அவளுடைய ஆவிக்கே ஆபத்து நேரிடும்படியாக அடிமேல் அடிஅடித்து அவளை விளாசினான் ஆத்திரமடைந்த ஆண்டை. ஜார் காலத்தில் படுகுழியில் கிடந்த ரஷ்யப் பெண்கள் சோவியத் புரட்சிக்குப் பிறகு ஆண்களுக்குச் சரிசமான மாக அரசியல் அரங்கத்தில் ஆட்சி செலுத்திவருகின்றனர்.

தொழிற் சங்கங்களில்

சோவியத் அரசியல் வாழ்க்கையில் முக்யத்வ மடைந் துள்ள தொழிலாளர் சங்கங்களிலும் பல்லாயிரம் பெண் களை நாம் பார்க்கலாம். சோவியத் தொழிலாள உலகத் தில் ஒரு கோடி பெண் மக்கள் அங்கத்தினராயுள்ளனர். 1940-ல் தொழிலாளர் பிரதிநிதிகளாக 6½ லக்ஷம் பெண் மணிகள் மத்திய மாகாண, ஜில்லா, தாலுக்கா தொழிலா ளர் கமிட்டிகளில் ஸ்தானம் வகித்தனர். 57 நபர்கள்

தொழிற் சங்க அக்கிராசனர்களாகவும், பொதுக் காரிய தரிசிகளாகவும் உழைத்து வந்திருக்கின்றனர்.

ஜெர்மானிய—ரஷ்யப் போர் தொடங்கும் வரையில் சுமார் ஒருலக்ஷம் ஸ்திரீகள் கூட்டுறவு சாலைகளின் மானேஜ்மெண்டிலும், அவைகளின் கணக்கை ஆடிட் செய்யும் கமிட்டிகளிலும் வேலை பார்த்திருக்கின்றனர்.

லெனின் உபதேசம்

சோவியத் பெண்களுக்கு எல்லாவித தொழில்களிலும் ஈடுபடுவதற்கு உரிமையுண்டு. சோவியத் யூனியன் அளித்து வரும் அரிய சந்தர்ப்பங்களை கொஞ்சமும் வீணுக்காமல், அவைகளை உபயோகித்து நாட்டின் சக்தியை அதிகரித்து வருகின்றனர் ரஷ்ய மாதர்கள். "சோவியத் சர்க்காரின் ஆக்கவேலை வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானுல் லக்ஷக்கணக்கான பெண்கள் அதில்பங்கெடுத்துக்கொள்ள வேண்டும்" என்ருர் தீர்க்கதரிசி லெனின்.

லெனின் புத்திமதியை சிரமேற்கொண்டு ஆலைத்தொழில்களிலும் விவசாயத் தொழில்களிலும் 1939ல் சேர்ந்திருந்தவர்கள் 3 கோடி, இவர்களில் 190 லக்ஷம் கூட்டுப்பண்ணையில், பாக்கி 110 லக்ஷம் தொழிற்சாலைகளிலும் ஆபீஸுகளிலும், 1939ல் மொத்தத் தொழிலாளர்களில் 40 சத விகிதம் பெண்கள். ஆலைத் தொழிலாளர் தொகையில் மாத்திரம் 43 சதவிகிதம். வைத்திய இலாக்காவிலோ மிகப் பெரும் பான்மையோர் பெண்கள்தான்.

வேலைநேரம், சம்பளம், ஓய்வு

இப்பொழுது நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம். வேலை கஷ்டமும், ஆபத்தும் நிறைந்துள்ள தொழில்களில் 7 மணி

நேரம்தான்: ஜூன் 1940க்கு முன் 7 மணி நேரம் முறையே நாடெங்கும் அமுலிலிருந்து வந்தது. இரவு காலத்தில் வேலை செய்தாலும் 6 மணி நேரம் ஒரு நாளைக்கு. யுத்தத்திற்கு வேண்டிய சாமான்களை உற்பத்தி செய்யும் பாக்டெரிகளில் தினசரி இதைத்தவிர 3 மணி நேரம் வேலை செய்யச் சட்டம்வேண்டுமென்றனர் தொழிலாளிகள். அந்த 'ஓவர்டைம்' வேலைக்கு 1½ பங்கு விகிதத்தில் ஓவர்டைம் சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது.

பெண்களுக்கும் ஆண்களுக்கும் வருஷத்திற்கு சம்பளத்துடன் கொடுக்கப்படும் ஓய்வு நாட்கள் 14. ஆனால் பல ஸ்திரீகளுக்கு ஒரு மாதத்திற்குமேல் லீவு கிடைத்துவருகிறது. தேக அசௌக்கியத்தாலாவது, எதிர்பாராத ஆபத்துகள் விளைவதினாலாவது, வீட்டில் வியாதியஸ்தர்களை கவனிக்க வேண்டிய அவசியத்தினாலாவது தொழிற்சாலைக்குப் போவது தடைபடுமானால், தொழிற்சாலைகளினால் பிரத்தியேகமாக சர்க்காருக்குக்கொடுக்கப்பட்டிருக்கும் சமுதாய இன்ஷ்யூரன்ஸ் நிதியிலிருந்து உதவி அளிக்கப்படும். எல்லா மக்களையும்போல, சகலவிதமான இலவச வைத்திய சிகிச்சைகளையும் இலவசமாகப் பெறுவதற்கு பெண்களுக்கும் பாத்தியதையுண்டு.

கர்ப்ப ஸ்திரீகளுக்கு பிரத்யேக வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளிலும், ஆபீஸுகளிலும், மற்ற உத்தியோகங்களிலு மிருக்கும் பெண்களுக்கு பிரசவத்திற்கு முந்தி ஐந்து வாரங்களும், பிந்தி நான்கு வாரங்களும் முழுச் சம்பளத்துடன் லீவு கிடைக்கும். கூட்டுப் பண்ணையில் வேலை செய்பவர்களுக்கு முந்தி ஒரு மாதமும், பிந்தி ஒரு மாதமும் அரைச் சம்பளத்துடன் லீவு. இக்காலத்திற்குப் பிறகு, குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் பொருட்டு,

வேலை நேரங்களில் மூன்று மணிக்கு ஒரு தடவை தாய்மார்களுக்கு ½ மணி நேரம் ஓய்வு அளிக்கப்படும். இதனால் சம்பளக் குறைவோ, அதிக வேலை நேரமோ கிடையாது.

பிரும்மாண்டமான விவசாயப் பண்ணைகளிலும் பதினாயிரக் கணக்கான பெண்கள் தலைமை வகித்து மிகத் திறமையாக அவைகளை நடத்தி வருகின்றனர். இதன் பயனாக அவர்களது ஞானமும், உத்தியோகம் வசிக்கும் திறனும் பன் மடங்கு அதிகத்திருக்கின்றன.

இது மாத்திரமல்ல, வாலிபர் கழகங்களிலும், கலாபிவிருத்திச் சங்கங்களிலும், பௌதீக ரஸாயன சாஸ்திர அஸோஸியேஷன்களிலும், தேசியப் பாதுகாப்பு சபைகளிலும் ஈடுபட்டு அரிய சேவை செய்துவருகின்றனர். சோவியத் ஸ்திரீகள்.

ஆனால் பாஸிஸ்ட் நாடாகிய ஜெர்மனியில் காணப்படும் காட்சியென்ன! அங்கு பெண்கள் குழந்தைகளை யுண்டாக்கும் இயந்திரங்களாகத் தானிருந்து வருகின்றனர்.

III. தொழில் உலகத்தில்

கர்ப்ப ஸ்திரீகள் எக்காரணத்தைக் கொண்டும் வேலையிலிருந்து நீக்கப்படமாட்டார்கள். அவசியமானால் சுலபமான தொழில்களுக்கு மாற்றப்படலாம். அதிக நேர வேலையையும், இராக்கால வேலையையும் அவர்கள் செய்யக் கூடாது.

பலவித வசதிகள்

சோவியத் பெண்களின் இன்ப வாழ்க்கைக்கு பல காரணங்கள்: வீட்டு வேலைத் தொந்தரவுகள் மிகவும் குறைக்கப்

பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாத அதாவது 7 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை கவனிக்க நான்கு, ஐந்து ஸ்தாபனங்களுண்டு. உதாரணமாக கிண்டர் கார்டன்களும், நர்ஸரிகளும் தேச முழுவதும் பரவியிருக்கின்றன. 1940-ல் 70 லக்ஷத்திற்கு மேலான குழந்தைகள் இவ்விதமாக பராமரிக்கப்பட்டு வந்தன.

மேலே கூறப்பட்ட ஸ்தானங்கள் பெண்ணின் ராஜீய, கலாசார, சமுதாய முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவை. ஏன்! சோவியத் தாய்மார்களுக்கு இணையற்ற ஓய்வு நேரம் கிடைக்கிறது. இதனால் பொது வாழ்க்கையில் ஈடுபடவும் புதிய புத்தகங்களைப் படித்து ஞானத்தை விருத்தியாக்கிக் கொள்ளவும், சிரம பரிகாரம் செய்துகொள்ளவும் ஸினிமா, பாட்டுக் கச்சேரி, நாடகம் முதலியவற்றிற்குச் சென்று இன்பம் அனுபவிக்கவும், சுகசரீரத்துடன் குழந்தைகளுக்கு பால் கொடுக்கவும் அதிக சந்தர்ப்பங்கள் கிட்டுகின்றன.

சம்பளம் கொடுப்பதில் ஆண் என்றும், பெண் என்றும் வித்தியாசம் கிடையாது ஸோவியத் ரஷ்யாவில். * வேலைத்திறமைக்கும் அதன் அளவுக்கும் தகுந்தவாறுதான் சம்பளம் அளிக்கப்படுகிறது. ஆண்கள் செய்யும் தொழில்களையே பல பெண்மக்கள் மிகத் திறமையாகச் செய்து அதிக ஊழியம் பெறுகின்றனர்.

சோவியத் சட்டம்

சோவியத் பெண்ணுக்கு எதிர்காலத்தைப் பற்றியாவது, நிகழ்காலத்தைப் பற்றியாவது அனுவசியமான கவலைகள் எதுவும் கிடையா. அவளது உரிமைகளை சோவியத்

* இங்கிலாந்தில் இத்தகைய வித்தியாசமுண்டு.

குடியரசின் அரசியல் சட்டத்திலுள்ள 122-வது பிரிவு பாது காத்து வருகிறது. இப்பிரிவு சொல்வதாவது :—

" பொருளாதார, அரசியல், சமுதாய, கலாசாரத் துறைகளில் ஆண்களுக்குள்ள உரிமைகள் சோவியத் பெண்களுக்குமுண்டு.

" இந்த உரிமைகளைக் கிரியாம்சையில் கொண்டுவரும் பொருட்டு, பலவிதத் தொழில்களிலும் ஈடுபட உரிமையும், (2) வேலைக்குத் தகுந்த ஊதியமும், (3) ஓய்வும், (4) சமுதாய இன்ஷ்யூரன்ஸூம், (5) கல்வியும், (6) தாய்கள் குழந்தைகளின் நலன்களை கவனித்துவரும் சர்க்கார் ஸ்தாபனங்களின் பாதுகாப்பும், (7) பிரசவத்திற்கு முந்தியும், பிந்தியும் சம்பளத்துடன் லீவும், (8) பிரசவ வைத்திய சாலைகளின் உதவியும், (9) நர்ஸூகள், கிண்டர்கார்டன் களின் வசதிகளும் வழங்கப்பட்டிருக்கின்றனர். "

இந்த சோவியத் சட்டம் சோவியத் பெண்கள் தினசரி வாழ்க்கையில் அனுபவித்துவரும் உரிமைகளைப் பாதுகாப் பதற்காகவே ஏற்பட்டுள்ளது. அதாவது, இச்சட்டம் ஏற் படும் முன்பே, இவ்வுரிமைகளை சோவியத் பெண்கள் அனு பவித்து வந்தனரென்பது பொருள்.

அநேக தொழில்களில்

ஜார் காலத்தில் பெண் தொழிலாளர்களில் 80 ./. வீடு களில் வேலைபார்த்து வந்தனர். இப்பொழுது 8 சதந்தான் அத்தகைய வேலைகளில் இருக்கின்றனர்.

1939-ல் மெஷின் உற்பத்தி செய்யப்படும் * தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களில் $33\frac{1}{3}$ ·/. பெண்கள். ஆனல் ஜார் காலத்திலோ 2 ·/. தான்.

இம்மாதிரியாகவே ரயில்வே போக்குவரத்துக்களின் மீதும் சோவியத் பெண்கள் "படையெடுத்து விட்டனர்." தேசத்திலேயே 1928-ல் ஆறு உதவி இஞ்சின் டிரைவர்கள் தான் பெண்கள், ஒரு பெண் இஞ்சின் டிரைவர்கூட கிடை யாது. ஆனல் 1939-ல் 4000 பேர் எஞ்சின்கள் ஓட்டியும், 5000 பேர் எஞ்சின் ஓட்டும் தொழிலைக் கற்றும் வந்தனர்.

பஸ், டிராம், தந்தி, தபால், டெலிபோன், ரேடியோ ஸர்விஸ்கள் சம்பந்தப்பட்ட சகல நுட்பமான காரியங்களை யும் அறிந்து அத்தொழில்களில் முதன்மை ஸ்தானம் பெற்ற னர் சோவியத் ஸ்திரீகள். பலர் பொறுப்புள்ள நிர்வாகப் பதவிகளையும் வகித்து வருகின்றனர். தொழிற்சாலைகளில் பிரிகேட் (Brigade) தலைவர், போர்மன், இஞ்சினியர், டைரக்டர் உத்தியோகங்களை திறமையாகவே நடத்தி வரு கிறார்கள். ரயில்வே ஸ்டேஷன்மாஸ்டர் வேலை பார்ப்பதி லும் இவர்கள் கைதேர்ந்தவர்கள்.

ஸ்டகானவ் இயக்கம்

சோவியத் தொழிலாள சமூகத்தின் மிக முக்கிய அம் சம் அது தொழிலின்பால் கொண்டுள்ள மனோபாவமே யாகும். ரஷ்யப் பாட்டாளிகள் பாடுபடுவது அவர்களுக்கா கவே தான்; அவர்களுக்கு எஜமானனென்று எவருமில்லை.

---

* இத்தொழில் எல்லா ஆலைத் தொழில்களைக் காட்டி லும் மிகக் கடினமானது. மற்ற தொழில்களுக்கு ஆதார மானது.

தங்களது வேலைத் திறமைக்குத் தகுந்தவாறே நாட்டின் க்ஷேமமும், அவர்களின் வாழ்க்கை நிலை சிறப்பும், பாதிக்கப் பட்டு வருகிற தென்பதை அவர்கள் அறிவார்கள். இந்த ஞானம் அவர்கள் தொழில்களில் காண்பிக்கும் உற்சாகத் திற்கு மூலகாரணமாகும்.

ரேசவியத் ஆட்சிக்கு முன்பு, பிற தொழிலில் ஈடுபடுவது பிறரால் சுமத்தப்படும் பெரும் பளுவாக கருதப்பட்டது. இப் பொழுதோ, அது ஒரு கௌரவ சின்னமாகவும், கீர்த்தியின் அறிகுறியாகவும், தைரியம், வீரத்தன்மை இவற்றின் பிறப் பிடமாகவும் விளங்கி வருகிறது.

மக்களின் இம் மனேபாவத்தை 1935-ல் தோன்றிய ஸ்டகானுவ் இயக்கம்* உருவாக்கிய தெனக் கூறலாம். தொழில் சம்பந்தமாக ஏற்படும் இந்த சோஷலிஸ்ட் மனேபா வத்தை வளர்த்து உந்தித்தள்ளும் சக்தி (Powerful forward impulse) அளித்ததும் இவ்வியக்கமே. ஆகவே, தொழி லாள வர்க்கத்தினிடையே எல்லாவித தொழில் உற்பத்தித் துறைகளிலும் சிநேகத் தன்மை வாய்ந்த பலத்த போட்டி பரவிவருகிறது. இப்போட்டியில் சோவியத் பெண்கள் பல வெற்றிகளை அடைந்துள்ளனர்.

தொழிற்சாலைகளில்

ஸ்டகானுவ் இயக்க ஆரம்ப கர்த்தாக்களில் தூஷ்யா

* ஸ்டகானுவ் இயக்கம்—அலெக்ஸி ஸ்டகானுவ் என்ற ஒரு நிலக்கரித் தொழிலாளி ஒரே ஷிப்டில் அதிகச் சிரமமில்லாமல் வழக்கம் போல் உற்பத்தி செய்வதைவிட அதிகமாக உற்பத்தி செய்து காண்பித்ததிலிருந்து பிற தொ ழில்களுக்கும் பரவி தொழிலாளர்கள் மதியூகத்தினுல் உற் பத்தியை உற்சாகத்துடன் பெருக்கும் இயக்கமே ஸ்டகா னுவ் இயக்கம்.

விஞேகிஷாவா ஒருவர். இப்பெண்மணி ஒரு நெசவுத் தொழிலாளி. ஒரே நேரத்தில் 216 நெசவுத் தறிகளை கவனிக்கக் கூடிய சக்தியைப் பெற்று 1935ல் உலகத்தையே பிரமிக்கச் செய்தாள்.

தூஸ்யாவின் ஜீவிய சரித்திரம் அவளது நாட்டிற்கும், காலத்திற்கும் தகுந்தவாறு அமைந்துள்ளது. அவளுக்கு சிறு வயதிலேயே நெசவுத் தொழிலின்மீது விருப்பம். இத் தொழில் கிடைத்ததும் அளவற்ற சந்தோஷம் பதினாறுவது வயதில் நெசவு ஆலைப் பயிற்சி கூடத்தில் சேர்ந்தாள். 1931ல் பயிற்சியைப் பூர்த்தி செய்துவிட்டு நெசவுத் தொழிலில் ஈடுபட்டாள். முதன் முதலில் 16 தறிகளே இவளிடம் கொடுக்கப்பட்டன. 1935, மே மாதம் 70 தறிகள். நவம்பரில் 144 தறிகள்; அதாவது அமெரிக்க ரிகார்டை விட 50·/. அதிகம். உலகத்திலேயே நெசவுத் தொழிலில் முதன்மை ஸ்தானம் பெற்றாள். ஆனால் அவள் திருப்தியடையவில்லை. இன்னும் சிறிது காலத்திற்குள் ஒரே நேரத்தில் 216 தறிகளை கவனிக்கும் ஆற்றலைப் பெற்று ஜயபேரிகை கொட்டினாள், உலகத்தின் ஆச்சரியத்திற்கும் புகழுக்கும் பாத்திரமானாள். 1936-ல் 284 தறிகள்! ஸோவியத் குடியரசு இவளது திறமையை மெச்சி 'லெனின் பதக்கத்தை' (Order of Lenin) இவளுக்கு வழங்கியது. ஸோவியத் மத்திய சட்டசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

பிரக்யாதி பெற்ற மற்றொரு ஸோவியத்மாது ஜீவைடா வின்ராயிஸ்காயா (ZINAIDA). உலகத்திலேயே முதன் முதலாக ரயில்வே இஞ்சின் டிரைவராக வந்தபெண் இவள் தான். உலகத்திலேயே ஒரு ரயில்வே ஸ்தாபனத்துக்கு தலைவிப் பதவியை வரித்த முதல் ஸ்திரீயும் இவளே. பிட்டர் (Fitter) வேலையை விட்டுவிட்டு இஞ்சின் டிரைவராக ஆனவள். அடுக்கடுக்காக பல ஸ்டகானுவைட் வெற்றிகள் இவ

ளுக்கு. லெனின் பதக்கத்தை (Order of Lenin) பரிசாக பெற்ருள். 'மாஸ்கோ ஸர்கூட்' ரயில்வேக்கும் தலைவியானாள் 1939-ல்.

ஜினேடாவின் வாழ்க்கையுடன் ஜார்காலத்திய ஒரு பெண்மணியின் சரித்திரத்தை ஒப்பிட்டுப்பார்ப்போம். ஓல்கா என்ற ஒரு பெண்மணி 1863-ல் ஒரு ரயில்வே ஸ்டேஷனில் டிக்கட் கொடுக்கும் உத்தியோகத்தில் சேர்ந்தாள். 50 வருடங்களுக்குப் பிறகும் இதே தொழில் செய்து வந்தாள். வாழ்க்கையில் ஒருவித முன்னேற்றமும் கிடையாது.

தூஷ்யா, ஜினேடாவைப்போல் சாமர்த்திய முள்ள ஆயிரக்கணக்காண ஸோவியத் பெண்களைக் காணலாம். நெசவுத் தொழிலாளியான என். ஓடின்ட்ஸோவாவையும், பூமிக்கடியில் செல்லும் குகைவண்டிப் பாதைவேலையில் டி. பீடோரோவாவையும் (T. FEDOROVA) அறியாதவர் ஸோவியத்நாட்டில் எவருமில்லை.

வயல்களில்

நகரப் பெண்களைப் போல கிராமங்களிலிருக்கும் மாதர்களும் தங்களது தொழில் வன்மையையும், அறிவையும் பலமடங்கு விருத்தி செய்துகொண்டனர்.

1940ல் மொத்த கூட்டுப்பண்ணைகளில் 40/. பெண்களாலேயே சாகுபடி செய்யப்பட்டுவந்தன. 27,000 *ட்ராக்ட்டர் ட்ரைவர்களும், 6,600 ஹார்வெஸ்டர்–*கம்பையின் ஆப்ரேட்டர்களும் பெண்களே யாவர் விவசாயத் தொழிலிலுள்ள நுணுக்கமான விஷயங்களையுமறிந்துவிட்டனர். கால் நடை

(1) *ட்ராக்டர்—இயந்திர ஏரு; (மிஷின் கலப்பை)

(2) *ஹார்வெஸ்டர் கம்பைன்—அறுவடை செய்யும் இயந்திரம்;

களுக்காக ஏற்பட்டுள்ள கூட்டுப் பண்ணைகளில் 40 ஆயிரம் பெண் மானேஜர்கள்; 42,500 *ஷாக் பிரிகேட் (Brigade) தலைவிகள்; கூட்டுப்பண்ணை நிர்வாகத்தில் அக்கிராசனராக வும், உப அக்கிராசனராகவும் இருந்தவர்கள் 15 ஆயிரம். நாட்டின் விவசாயப் பகுதியில் பெண்களின் செல்வாக்கும், எண்ணிக்கையும் அதிகமாய்க் கொண்டேவருகிறது.

கிராமங்களுக்கும் ஸ்டகானேவைட் இயக்கம் பரவியது. இதன் விளைவாக விவசாயத்தொழிலிலிருக்கும் பல பெண்கள் பிரபல்யமடைந்தனர். இவர்களில் முக்கியமானவர் மேரியா, (MARIA) ஆண்கலீனு, (ANGELINA) பாஷா (PASHA) முதலியவர்கள்.

மேரியா ஒரு ஏழைக் குடியானவனின் குமாரி. ஜார் ஆட்சியில் இவளுக்கு பல தொல்லைகள், பல அவதிகள். சோவியத் புரட்சியினுல் இவளது துன்பங்கள் தொலைந்தன, வறுமை விரைந்தோடியது. விவசாயத் தொழில் கல்விகற்று கூட்டுப்பண்ணையில் சேர்ந்தாள். துரிதமாகவும், திறமையாகவும் தொழில் செய்பவர்களில் இவள் ஒருவள். பீட் கிழங்கு உற்பத்தியில் இவளது தலைமையின் கீழ் ஈடுபட்டிருந்த கூட்டத்தினர்தான் அதிக விளைச்சலுக்கு வழி காட்டினுர்கள். ஆனுல் சிறிது காலத்திற்குப் பிறகு மேரியாவின் சிஷ்யைகள் அவளைத் தோற்கடித்துவிட்டனர். இவ்விதம்

---

*ஷாக் பிரிகேட்: தேசத்தின் செல்வத்தை துரிதமாக பெருக்குவதற்காக போட்டதிட்டத்தைவிட ஒவ்வொருதொழிலிலும் அதிக பொருள்களை உற்பத்தி செய்யவும், கொடுக்கப்பட்ட கோட்டாவை தவக்கமின்றி முடிக்கவும், வேலை செய்வதில் கொஞ்சம் மந்தமாக இருக்கும் தொழிலாளர்களுக்கு உணர்ச்சியூட்டவும், சில தொழிலாளர் தாங்களே அவ்வேலைகளை மேற்கொண்டு துரிதத்தில் முடிப்பார்கள். அந்த தொழிலாளர் கோஷ்டிக்கு 'ஷாக் பிரிகேட்' என்று பெயர்.

வெற்றி பெற்ற டேஜிக்பாயேவா (TEZIKBAYEVA) "அகில ஸோவியத் பீட் ஆராய்ச்சிக் கழக"த்தின் அங்கத்தினராக 1939-ல் நியமிக்கப்பட்டாள்.

அதிக உற்பத்திப் போட்டியில் சோவியத் பெண்கள் தங்களது அனுபவத்தையும் உற்சாகத்தையும் மாத்திரம் உபயோகிப்பதோடல்லாமல், விவசாய சாஸ்திர துறையில் அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் புதிய மார்க்கங்களையும் கையாண்டு உற்பத்தியை அதிகரிக்கின்றனர். மேலும், அனுபவத்திற்கேற்ப உற்பத்திமுறையில் மாறுதல்களை உண்டாக்கி தவறுகளை தவிற்கின்றனர். விவசாய சாஸ்திர நிபுணர் புரொஃபஸர் கார்ப்பெங்கோ (KARPENKO) 'பீட்' கிழங்கு சாகுபடி சம்பந்தமாக எழுதிய நூலை ஸ்டகானவைட் ஸ்திரிகளிடம் சமர்ப்பித்து. அவர்களின் ஆலோசனையின்படி அதில் பல திருத்தங்கள் செய்து, புதிய விஷயங்கள் சேர்த்த பிறகே அதை பிரசுரித்தார்.

பருத்தி, உருவளக்கிழங்கு, வஸந்தகால கோதுமை முதலியவற்றின் விளைச்சலை உலகத்தின் எல்லாபாகங்களையும்விட அதிகமாக்கி காண்பித்தது சோவியத் பெண்களே யாவர். சாதாரணமான விளைச்சலைவிட 2-3 மடங்கு அதிகமாகவே உற்பத்தி செய்துவரும் பெண்களின் தொகை வருஷாவருஷம் பெருகிக்கொண்டே வருகிறது.

ஞானக் குறைவு. தொழில் திறமையின்மை, குறுகிய மனோபாவமும் பிற்போக்கு தன்மையும் வாய்ந்தவர்களின் எதிர்ப்பு. பரிகாசம், மக்களின் அவநம்பிக்கை முதலியவை பெண்களின் முன்னேற்றத்திற்கு பெரும் முட்டுக் கட்டைகளாயிருந்தன, இவ்வளவு கஷ்டங்களையும் எதிர்த்துப் போராடி ஸோவியத் பெண்கள் வெற்றியடைய வேண்டியதாயிற்று. விவசாயத்தொழிலில் இவர்களின் தலைவர்கள் மேரியாவும், ஆண்கலீனவும். இவ்விருவர்களுடையசக்தியும்,

நடத்தையும், மற்றவர்களுக்கு ஊக்கத்தையும், தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் அளித்தன.

விவசாய உலகத்தின் பல பகுதிகளிலும் போல்ஷிவிக் போட்டி; ஸ்டாகனைவட் சாமர்த்தியம். பசுக்களுக்குத்தகுந்த தீனி கொடுத்து, அவைகளை நன்முக போஷித்து அதிகப் பால் கறப்பதிலும் பால்காரிகளின் பந்தயம். விடாமுயற்சியாலும் சலியாத உழைப்பினலும் வெற்றிபெற்றனர் இப் பெண்மணிகள். ட்ராக்டர் (Tractor) மெஷின்களின் உதவியால் நிலத்தை உழுவதிலும் மிகுந்த ஊக்கம். இதன்பயனுகை நிலக்கரி செலவை குறைப்பதற்கான முறையைக் கண்டுபிடித்தனர் சோவியத் ஸ்திரிகள். சமுதாயத் துறையில் சகலவிதத்திலும் சாதித்துவரும் தேவைகளை சர்க்கார் சந்தோஷத்துடன் வரவேற்று அவர்களுக்கு பட்டங்களையும், பதக்கங்களையும் பொழிகின்றது உற்பத்தித் துறையில் தங்களது வல்லமையையும், நுட்ப புத்தியையும் உபயோகித்து உற்பத்தியை 2, 3 மடங்கு அதிகரித்த மாதர்களை பொதுமக்கள் (தங்களின் பிரதிநிதிகளாக) சோவியத் யூனியனின் மத்திய சட்டசபை அங்கத்தினராக தேர்ந்தெடுக்கிருர்கள்.

IV. கலைவளர்ச்சியும், சமுதாய நலன்களும்

சோவியத் யூனியன் தனது பெண் மக்களுக்கு சமுதாய, அரசியல் சுதந்திரங்களை மாத்திரம் வழங்கியிருப்பதாக நாம் கருதக்கூடாது; கல்வி, கலாசாரத் துறைகளில் அவர்களின் முன்னேற்றத்திற்காக பலவித வசதிகளையும் அளித்திருக்கிறது.

கல்வித் துறையில்

ஜார் காலத்திய ரஷ்யாவில் 100-க்கு 73 பேர் எழுத்தறி வில்லாமலே இருந்தனர். பெண் தொழிலாளிகளிலும், விவசாய மாதர்களிலும் ஒருவருக்குக் கூட எழுதப் படிக்கத் தெரியாது.

இன்று சோவியத் ரஷ்யாவில் படியாதவர்கள் ஒருவரு மேயில்லே. 1941 ல் சோவியத் மாணவி, மாணவர்களின் மொத்தத் தொகை 4¾ கோடி.

கல்வி கற்பதில் சோவியத் பெண்களின் உற்சாகம் அளவற்றது. தாகத்தால் தவிக்கும் ஒருவனுக்குத் தண்ணீர் எவ்வளவு அவசியமோ, அவ்வாறே சமுதாய, பொருளா தாரத் துறைகளில் பலதரப்பட்ட நிர்வாகங்களே நிர்வகித்து வரும் பெண்களுக்கு கல்வி இன்றியமையாததாயிற்று. தொழில் கல்வி ஸ்தாபனங்களுக்கு சென்று தங்களது அறி வை அதிகப்படுத்தி வருகின்றனர். இப் பள்ளிகளில் 1936 லிருந்து 1940 முடிய இவர்களின் மொத்தத் தொகை 50 லக்ஷத்திற்கு மேல்.

சமுதாய நலன்கள்

முதலாளித்வ ரஷ்யாவில் பெண் தொழிலாளிகள் இரு ளடைந்த, ஈரம் காத்த, காற்றோட்டமில்லாத மிகச்சிறிய மண் குடிசைகளில், புளிமூட்டைபோல் ஒருவரோடு ஒருவர் அமுக் கப்பட்டு, ஆடு, மாடுகள் சகிதமாக, துர்நாற்றத்தில், படு தொல்லேகளால் தவித்தனர். சோவ்யக் ரஷ்யா இந்த நரக வாழ்க்கையை அழித்து, நாகரிகத்துடன் கூடிய நவீன நகர வாழ்க்கையை அளித்துள்ளது. தங்குவதற்கு தாராளமான இடம், வீட்டைச் சுற்றி செடிகளும், மரங்களும். விவசாய பெண்களுக்கு கிராமங்களில் கல் கட்டிடம், இந்த வீடும் ஒரு

பெரிய தோட்டத்தின் மத்தியில்; இத்தோட்டத்தில் பூக்க ளும், பழங்களும், (உணவுக்குத் தேவையான) பச்சைக் காய்கறிகளும் கிடைக்கும்.

பாட்டாளி மக்களுக்கு பலவித செளகரியங்களை அளித் திருக்கிறது சோவியத் அரசாங்கம். இவைகளில் வைத்திய உதவி மிக முக்கியமானது. நாட்டின் மூலைமுடுக்குகளிலி ருக்கும் ஜனங்களுக்கும் சாக்கார் இலவச வைத்திய உதவி கொடுக்கிறது. ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் கூட்டுப் பண்ணைகளிலும் பெண்களுக்கு பிரத்யேக வசதி கள் உண்டு.

விளையாட்டுப் பகுதியை எடுத்துக்கொள்வோம். முத லாளித்துவம் ரஷ்யாவில் தலைவிரித்தாடியபொழுது சோம் பேரி வாழ்க்கையில் மயங்கிக் கிடந்த சில பணமூட்டைகளே விளையாட்டின் இன்பத்தை அனுபவித்தனர். ஆனல் சோஷ லிஸ்ட் ரஷ்யாவில் கோடிக்கணக்கான பொதுமக்கள் தேகப் பயிற்சியிலீடுபட்டு தேக ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வரு கின்றனர். தேகப்பயிற்சிக் கூடங்களில் சோவியத் பெண் கள் மொத்த அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பங்கு.

நாகரிக வாழ்க்கை

சோவியத் நகர, கிராம வாழ்க்கைகளிடையே அதிக வித்தியாசங்கள் கிடையாது. சோவியத் யூனியனின் எல்லா பாகங்களுக்கும் ரேடியோ உண்டு. ஆகவே எல்லா மக்க ளுக்கும் உலக நிகழ்ச்சிகள் நன்ருகத் தெரியும். நகரங்களில் காணப்படும் கலாபிவிருத்தியை கிராமங்களிலும் காணலாம். தினசரி பத்திரிகைகள், புத்தகங்கள், வார, மாதாந்திர பத்தி ரிகைகள் யாவும் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின் றன. சினிமாக்களும் நாடகங்களும் கிராமங்களில் காண் பிக்கப்படுகின்றன. கலைவளர்ச்சியில் பெண்களின் ஊக்கம் நாளடைவிலே பெருகிக்கொண்டே வருகிறது.

சோவியத் பெண்கள் பத்திரிகைகள் படிப்பதோடு நின்றுவிடவில்லை. தங்களது தினசரி வாழ்க்கையை விவரித்தும், தங்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாகவுள்ளனவற்றைக் கண்டித்தும், சமூக வாழ்க்கையின் குற்றங் குறைகளை சுட்டிக் காட்டி அவைகளை தவிர்ப்பதற்கான மார்க்கத்தை விளக்கிச் சொல்லியும் பத்திரிகைகளுக்கு வியாசங்கள் எழுதுகின்றனர். சமுதாய, பொருளாதார, அரசியல் விவகாரங்களில் பெண்களுடன் ஒத்துழைக்கும் ஓர் சிறந்த தோழனாக சோவியத் யூனியனின் பத்திரிகை உலகம் விளங்கி வருகிறது. "பெண்கள் இஷ்டப்பட்டால் தங்களது கர்ப்பப் பையிலிருக்கும் கருவை கரைத்துவிடலாமா?" என்ற பிரச்னை சோவியத் சட்டசபையில் விவாதத்திற்கு வந்தபொழுது 'ப்ராவ்தா' பத்திரிகைக்கு மாத்திரம் 9000 கடிதங்களை சோவியத் பெண்கள் தங்கள் கருத்தை விளக்கி எழுதினர் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்! மற்றப் பத்திரிகைகளுக்கும் இவ்விதமே எண்ணற்ற கடிதங்கள் வந்தன; பல கடிதங்கள் பிரசுரிககப்பட்டன.

சோவியத் பெண்களின் வாழ்க்கை ரஷ்யப் பெண்களின் மறுமலர்ச்சியாகும்: அது பொதுமக்களுள் பூர்ண வளர்ச்சியை புஷ்பிக்கும் வாழ்க்கை; அது சுதந்திர மணம் வீசும் வாழ்க்கை; அது இன்பத் தேன் ததும்பும் வாழ்க்கை. ரஷ்யப் பெண்கள் கலைக் கடலிலே குளித்து களிப்புற்றது சோவியத் ஆட்சியிலேதான். இலக்கியம், சங்கீதம், ஓவியம், விஞ்ஞான சாஸ்திரம் முதலிய கலைகள் ஸோவியத் பெண்களின் பொக்கிஷம். 1928ம் வருடத்தின் புள்ளி விவரப்படி ஒவ்வொரு தொழிலாளர் பெண்ணும் மாதம் சராசரி நான்கு தடவை சினிமா, நாடகம், ஸர்க்கஸ், சங்கீதக்கச்சேரி முதலியவற்றிக்குச் சென்று இன்புற்றனர். கூட்டுப் பண்ணைகளில் வேலைசெய்துவரும் மாதர்களும் இப்படியே. ஜார்

ஆட்சியில் எத்தனை சினிமாக்கள், நாடகக் கொட்டகைகள் கிராமங்களில் இருந்ததாகச் சொல்லமுடியாது?

உயர்தரக் கல்வியும் ஆராய்ச்சியும்

உயர்தரக் கல்வி கற்பதிலும் சோவியத் பெண்கள் அதிக சிரத்தை காட்டியுள்ளனர். அதற்கு முக்கிய காரணம் சோவியத் அரசாங்கம் அவர்களுக்கு அளித்திருக்கும் சந்தர்ப்பங்களும் வசதிகளும்தான். உயர்தரக் கல்வி கற்றுவரும் பெண்களின் தொகை சுமார் 4 லக்ஷம். இந்த எண்ணிக்கை முதலாளித்துவ ரஷ்யாவின் எண்ணிக்கையைவிட 13 மடங்கு அதிகம். இன்றைய ஐரோப்பா முழுவதும் கற்றுவரும் பெண்களின் எண்ணிக்கையைவிட 2 மடங்கு அதிகம்.

1928லிருந்து 1940 வரையில் கலாசாலைகளுக்கும் பல்கலை கழகங்களுக்கும் சென்ற பெண்கள் 3½ லக்ஷம். 1939ல் உயர்தர பாடசாலைகளில் கல்வி கற்றுவந்தவர்கள் 60 லக்ஷம்.

பல துறைகளில் நிபுணர்களாக விளங்குகின்றனர் சோவியத் பெண்கள். வைத்திய சிகிச்சைத் தொழிலிலும் கல்வி போதிக்கும் தொழிலிலும் பெண்களே மிக பெரும்பான்மையோர். விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி, சித்திரம் எழுதுதல், பத்திரிகை நடத்துதல், கல்வி கற்பித்தல் முதலிய தொழில்களில் 15 லக்ஷத்திற்குமேல் வேலைபார்க்கின்றனர்.

உபாத்தியாயினி தொழில் என்பது கல்வி கற்றுக் கொடுப்பது மாத்திரமல்ல; மாணவர்களையும், மாணவிகளையும் தைரியமும், தேசபக்தியும், தெளிவான புத்தியும், தொழில் அன்பும் உடைய பிரஜைகளாக விளங்கும்படி செய்வது ஒரு உபாத்தியாயினியின் கடமையாகும்.

இக்கடமையை நிறைவேற்றும் பாக்கியம் சோவியத் பெண்களுக்கே.

சுகாதாரத் துறையில் வேலைப்பார்க்கும் 12 லக்ஷம் பேர்களில் பெரும்பகுதியினர் பெண்களே. 1939 முடிவில் 72,600 பெண் டாக்டர்கள்; அதாவது மொத்த டாக்டர்களில் 60 சதவிகிதம். ஜார்காலத்தில் தேசம்பூராவும் ஆண், பெண் டாக்டர்கள் 20 ஆயிரம்தான்; இதில் 1900 நபர்கள் மாத்திரம் பெண்கள். அதாவது இன்றுள்ள அளவைவிட 38 மடங்கு குறைவு.

சோவியத் ரஷ்யாவின் மிகப் பெரிய ரண சிகிச்சை கல்விக் கூடம் (Sklifasovsky Institute) மாஸ்கோவிலுள்ளது. வாலண்டைனு கோரினுவ்ஸ்கி என்ற ஸ்திரீயே இதன் தலைமை ஆசிரியை. 1939-40-ல், அதாவது, பின்லாந்து யுத்த காலத்தில் ரண சிகிச்சைக்காக முதன் முதலில் போர் முனைக்குச் சென்றவர்களில் வாலண்டைனுவும் ஒருவர். கொஞ்ச நேரங்கூட வீணுக்காது ஒவ்வொரு உயிரையும் காப்பாற்ற பெரும் பாடுபட்டார். நம்பிக்கையிழந்து கைவிடப்பட்ட பல சோல்ஜர்களுடைய உயிர்களை, ஆப்ரேஷன் செய்து அந்த லேடி டாக்டர் காப்பாற்றினர். வரோஷிலாவ் பேக்டரியோலாஜிக்கல் ஆராய்ச்சி சாலையைச் சேர்ந்த டாக்டர் M. M. பக்ரோவ்ஸ்காவா என்ற மாதையும் சோவியத் மக்கள் நன்கு அறிவர். பிளேக் நோயை பரவச் செய்யும் புதுவிதமான ஒரு விஷ கிருமியை இவர் கண்டு பிடித்தார். அதுவும் எப்படித் தெரியுமா! அப்பூச்சியின் இரத்தத்தை தனது உடம்பிலேயே இன்ஜெக்ஷன் செய்து கொண்டு, அதன் தன்மையை உலகத்திற்கு அறிவித்தார். இப்பொழுது பிளேக் நோயைக் கொல்லக் கூடிய ஒரு மருந்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறர்.

விஞ்ஞான சாஸ்திர இன்ஸ்டிடியூட்டுகளின் மொத்த ஊழியர்களில் மூன்றில் ஒரு பாகம் பெண்கள். 1941-ல் 33 ஆயிரம் பெண்கள் இவ்வுத்தியோகத்திலிருந்தனர்.

1940-ல் மாத்திரம் விஞ்ஞான சாஸ்திர பரீக்ஷைகளில் தேறின மாதர்களின் எண்ணிக்கை 600.

உலகப்பிரஸித்தி பெற்ற சோவியத் பெண் படிப்பாளி களுமிருக்கின்றனர். இவர்களில் முக்கியமானவர்கள் தேக சாஸ்திர நிபுணர் லினு ஸ்டேன். (Lina Stern) சரித்தி ராசிரியை அன்னு பானக்ராடோவா (Anna Pankratova) வும்.

தொழில் கல்வி

தொழில் கல்வி மூலையிலும் சோவியத் பெண்கள் பின் வாங்கவில்லை. பெரிய தொழிற்சாலைகளில் மாத்திரம் (இரும்பு, எஃகு, ஆயுத தொழிற்சாலைகளில்) 1940–ல் வேலை செய்து வந்த இஞ்சினியர்கள், மெகானிக்குகளின் மொத்த எண்ணிக்கை **1,70 000.** ஜார் காலத்தில் 300 நபர்களுக்கு மேல் இல்லை. சோவியத் நாட்டின் மெகானிக்குகளில் ஐந் தில் ஒருபாகம் பெண்கள். சில குறிப்பிட்ட தொழில்களில் பெண்களின் தொகை இன்னும் அதிகம். உதாரணமாக, ரஸாயன தொழில் இஞ்சினியர்களில் இவர்கள் மூன்றில் ஒரு பாகம்.

ஒரு சாதாரண தொழிலாளி கூட இஞ்சினியராக வருவ தற்கு ரஷ்யாவில் சந்தர்ப்பமிருக்கிறது இஞ்சினியர் குலோ போடுனுவாவை எடுத்துக்கொள்ளுவோம். இம்மாது வேலைக்கு வரும்பொழுதே இஞ்சினியர் பரீக்ஷையில் தேரி விட்டு வரவில்லை. முதன் முதலில் வீடு கட்டும் தொழிலில், கற்களை தூக்கவும், மண்ணை வெட்டுவதற்கும் ஒரு சாதா ரண தொழிலாளியாக ஒரு பெரிய இயந்திர சாலையில் சேர்ந்தாள். பிறகு அங்கிருக்கும் மெஷின்களை பழுது பார்க்கும் வேலையை ஏற்றுக்கொண்டு தொழிற்கல்விச் சாலைக்கு சென்றும் வந்தாள். சில மாதங்களுக்குள் அவள் ஒரு மெகானிக். அப்புறம், மெஷினின் பல பாகங்களையும்

ஒன்றாக சேர்த்து இயந்திரத்தை கோர்க்கும் டிபார்ட்மெண்டுக்கு மானேஜர். மறுபடியும் ஒரு இன்ஸ்டிடியூட்டில் தொழில் கல்விகற்று இஞ்சினியர் பட்டம் பெற்றாள்.

சில தொழிற்சாலைகளுக்கு தலைமை அதிகாரிகளாக சோவியத் பெண்கள் விளங்குகின்றனர். 'அகில சோவியத் பட்டுத்தொழில் நிர்வாகம்' லுபாவ் (Lubav) என்ற பெண் மணியின் தலைமையின் கீழேதான் நடந்து வருகிறது.

சங்கீதம்

சங்கிதத் துறையில் பிராபல்யமடைந்த ஸ்திரீகள் ரொம்பப்பேர்கள் உள்ளனர். சர்வதேசபோட்டியில் அநேக சோவியத் பெண்கள் வீணை, பியானோ முதலியவற்றை வாசிப்பதில் பரிசு பெற்றிருக்கின்றனர். லீஜா, ரோசா, மாரினா, நீனா, டாட்யானா முதலியவர்களை சங்கீத உலகமே புகழ்ந்து வருகிறது.

இலக்கியம், விஞ்ஞானம், சங்கீதம் முதலிய துறைகளில் தேர்ச்சிபெற்றவர்களுக்கு சோவியத் ரஷ்யாவில் 'ஸ்டாலின் பரிசு' வருஷா வருஷம் வழக்கப்பட்டு வருகிறது. இப்பரிசைப் பெற்றவர்களில் அநேகர் ஸ்திரீகள். இக்கோஷ்டியினருள் மிகமுக்கிய மானவர்கள் வாலேரியா, பார்சோவா, அல்லா, வீரா முதலியவர்கள்.

V. குடும்ப வாழ்க்கை

அன்றும், இன்றும்

ஜார்காலத்திய ரஷ்யப் பெண்கள் சமூகத்திலும்சரி, குடும்ப வாழ்க்கையிலும்சரி, யாதொரு உரிமையு மில்லாமல் ஆண்களின் அடிமைகளாக ஆதரவற்ற அனாதைகளாய்

அவதிப்பட்டுவந்தனர். சோவியத் ஆட்சி ஆரம்பித்ததும் அவர்கள் ஆண்களுடன் சமஉரிமைகளைப் பெற்று சமூகத்தில் சிறந்து விளங்குவதை சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டோம். இப்பொழுது அவர்களது குடும்பவாழ்க்கையை கவனிப்போம். வீட்டில் உள்ளங்கை தேயும்வரை உழைத்த போதிலும் கன்னிகையாயிருக்கும்பொழுது தகப்பன் திட்டுவான். "உன்னைவைத்துக்கொண்டிருக்கேனே" என்று சத்தம்போட்டு பெண்ணின் மனதை புண்படுத்துவான். கலியாணமான பிறகோ கணவன் கடுந்துரைப்பான். வீட்டில் நாள் முழுவதும் செக்குமாடுபோல் சலியாது உழைப்பாள். எள்ளு என்று கூறும் முன் எண்ணெயாக நிற்பாள். இப்படியிருந்து, "உன்னைக் கட்டிக்கொண்டு மாரடிக்கிறேனே" என்று உறும்புவான் அவள் புருஷன்.

இன்று சோவியத் அரசு ரஷ்யப் பெண்களின் குடும்பக் கொடுமைகளைப்போக்கி ஓர் புதிய, இன்ப வாழ்க்கையை அவர்களுக்கு அளித்திருக்கிறது. பணத்திற்காக பெண்கள் மணப்பது போய்விட்டது. தாய்மார்களின் தொல்லைகள் தொலைந்தன. ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படும் பரஸ்பர காதலால்தான் கலியாணம் செய்யமுடியும். சோவியத் ரஷ்யாவில் காதலியும், காதலனும் சமஉரிமை பெற்று, பரஸ்பரம் ஒத்துழைத்து, மன ஒற்றுமையோடு சுகவாழ்வு நடத்துகின்றனர்.

சோவியத் மக்களின் மனப்பான்மை ஜார்காலத்திய பழக்க வழக்கங்களை முற்றிலும் வெறுக்கிறது. அப்பொழுது கணவன் சொன்னது சட்டம், அவன் இட்டது திட்டம், சர்க்காரோ அவன் பக்கம். அவன்தான் குடும்ப அதிகாரி. இப்பொழுதோ, கணவனுக்கும், மனைவிக்கும் சமஉரிமைகள். ஒவ்வொருவரும் தான் இஷ்டப்பட்டவேலைக்குச் செல்லலாம். கலியாணமாகுமுன் ஒரு பெண்ணினிடமிருந்த சொத்துக்குக்

கலியாணம் முடிந்த பின்பும் அவளே சொந்தக்காரி, பிரிந்துபோக நேரிட்டால் கணவனது சொத்து கணவனுக்கும், மனைவியின் சொத்து மனைவிக்கும் கொடுக்கப்படும். ஆகவே பணத்திற்காக மாதர்களை மணந்துகொள்ளும் மோசடி மடிந்துவிட்டது சோவியத் ரஷ்யாவில்.

மனைவியும் புருஷனும்

ஒரு ஆணும் பெண்ணும் மனம் ஒப்பினுல் கலியாணம் செய்து கொள்ளலாம். கல்யாணத்தை முடிப்பதற்கு ரிஜிஸ்டர் செய்து கொண்டால் போதுமானது. மதசம்பந்தமான சடங்குகள் செய்யப்படவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. இது தம்பதிகளின் இஷ்டம். பதினெட்டு வயதாகிவிட்டால் தனக்கு விருப்பமான ஒருவரை மணந்துகொள்ளலாம். தென் ரஷ்யாவில் கலியாணத்திற்கு குறைந்த வயது பதினுரு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு புருஷனைத்தேடிக் கொள்வதற்குதகப்பனுர், அல்லது கார்டியனுடைய சம்மதம் தேவையில்லை. கணவனைத்தேடிக்கொள்ளும் பொறுப்பு ஒரு பெண்ணையே சேர்ந்தது. இவ்விஷயத்தில் அவளை ஒருவரும் நிர்ப்பந்தித்தல் கூடாதென சட்டம் திட்டமாகக் கூறுகிறது

தம்பதிகளில் யாராவது ஒருவர் அதிருப்தியடைந்து, பிரிந்துபோக விரும்பினுல் அதற்கு சட்டம் சுதந்திரமளித்திருக்கிறது. விசாரணை காலத்தில் அவர்களின் சொந்த ரகஸ்ய வாழ்க்கையைப்பற்றி எவ்விதப் பிரச்னையும் கோர்ட்டில் கிளப்பப்படமாட்டாது. ஒருவரையொருவர் பிரிந்து போகும் செய்தி பத்திரிகைகளில் வெளிவராது.

குயுக்தி வாதம் செய்யும் சில எதிரிகள் இத்தகைய சீர்திருத்தங்கள் குடும்ப வாழ்க்கையை குலைத்து விடுமென்றும், கட்டுக்கடங்காத சம்போக வாழ்க்கைக்கு சந்தர்ப்பங்கள் அளிக்குமென்றும் கூறி கூச்சலிட்டனர். ஆனுல் உண்மை

என்ன? குடும்ப வாழ்க்கைக்கு உலே வைத்தது ஜார் காலத்திய பழக்க வழக்கங்கள்தான். அவைகள் ரஷ்ய பெண்மணிகளே அடிமைகளாக்கியும், மறைமுகமாக விபசாரம் செய்வதற்குத் தூண்டியும் வந்தன. சோவியத் சட்டங்களோ இவைகளே அடியோடு ஒழித்து குடும்ப வாழ்க்கைக்கு புத்துயிர் அளித்திருக்கின்றன. சோவியத் குடும்பத்தில் கணவனுக்கும் மனேவிக்கும் சம அந்தஸ்து, சம உரிமை; ஒருவரிடத்தில் ஒருவருக்கு மரியாதை, பரஸ்பர காதல், நல்லெண்ணம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டது குடும்ப வாழ்க்கை. சோவியத் குடும்பம் பரிசுத்தத் தன்மை வாய்ந்தது; கட்டுப்பாடு உள்ளது. புனிதமானது. ஸ்திரமானதுமான குடும்ப வாழ்க்கையை காப்பாற்றுவதற்கு கங்கணம், கட்டிக் கொண்டிருக்கிறது சோவியத் சர்க்கார்.

மணவாழ்க்கையின் அவசியம்

வாலிபர்களின் நலனுக்காக உழைத்துவரும் 'காம்ஸோமால்ஸ்காயா ப்ராவ்டா' என்ற பத்திரிகை, சில வருஷங்களுக்குமுன் குடும்பவாழ்க்கை பிரச்னேகள் சம்பந்தமாக பொது ஜன அபிப்பிராயத்தைக் கோரியது. ஆயிரக் கணக்கான இளேஞர்கள் இவ்விஷயத்தைப் பற்றி அப்பத்திரிகைக்குக் கடிதங்கள் எழுதினர். அவற்றில் இரண்டு பின்வருமாறு:—

"கலியாணஞ் செய்து கொள்ள மறுப்பவர்களின் நோக்கம் என்னவென்று எனக்குப் புரியவில்லே," என்று எழுதினுன் ஒரு கம்யூனிஸ்ட் மாணவன். "ஒருவன் நல்ல தொழிலாளியாக இருந்து சோவியத் நாட்டுக்கு சேவை செய்ய வேண்டியதுதான். ஆனல் வாழ்க்கையே இதில் அடங்கி விடவில்லே. குடும்ப வாழ்க்கையின் அனுபவங்களும் அத்யாவசியமானவை. எனது மனேவியை நான் காதலிக்கிறேன்; எனது மகனுேடு கொஞ்சிக் குதூகலிக்கிறேன்.

வேலை முடிந்ததும் வீட்டிற்கு செல்வது சந்தோஷத்தைக் கொடுக்கிறது. குடும்பத்தை கவனிக்க எனக்கு வேண்டிய அவகாசமுமிருக்கிறது. அசைக்க முடியாத நட்பும், பரஸ்பர மரியாதையும், காதலும் இன்ப வாழ்க்கைக்கு அஸ்திவாரமாகும்.''

ஒரு மாணவியின் மணி மொழிகளை கவனியுங்கள். ''நான் இரும்புக்கலப்பற்ற உலோகங்களைப்பற்றிப் படித்து வருகிறேன். எனது கணவன் ஒரு பிட்டர் (Fitter). ஒரு பெண் குழந்தை பிறந்ததும் வீட்டு வேலையைப் பார்ப்பது சற்று கஷ்டமாகவிருந்தது. ஆனல் எனது கணவன் எனக்கு உதவி செய்து என் கஷ்டத்தைத் தீர்த்தார். குழந்தைக்குத் தகுந்த வயது வந்ததும் அதைக் குழந்தைகளை கவனித்துக் கொள்ளும் நர்ஸரிக்கு அனுப்பிவிட்டோம். எனது கஷ்டமான காலம் தீர்ந்து விட்டது.''

'' இப்பொழுது அந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்க்கும்பொழுது எங்களுக்கு சிரிப்புண்டாகிறது. குடும்ப வாழ்க்கையிலுண்டான தேகச் சிரமத்தினல் நாங்கள் அலுத்துக்கொள்ளவில்லை; குடும்ப வாழ்க்கையை வெறுக்கவில்லை. இதை நினைத்து நாங்கள் சந்தோஷப்படுகிறோம். குடும்ப சுகத்தையும், வேடிக்கைகளையும் இன்று அனுபவிக்கிறோம். ஆரோக்கியமான ஒரு குழந்தை இருக்கிறுள். எங்களுக்கு பரமானந்தம்.''

''என் புருஷனுடன் யாதொரு சண்டையும் பூசலும் கிடையாது. காதலால் பிணைக்கப்பட்டு அழியா நட்புடன் வாழ்கிறோம். என் படிப்பு முடிந்ததும் என் கணவன் நான் படித்துவரும் கல்வி ஸ்தாபனத்திலேயே சேர்ந்து வேறு தொழிலைக்கற்கப் போகிறுர். ஆகவே எனது படிப்பை

சீக்கிரம்முடிக்க முயற்சித்து வருகிறேன்." இது மாதிரி எண்ணற்ற கடிதங்கள் அந்தப் பத்திரிகைக்கு வந்தன.

சோவியத் குடும்ப வாழ்க்கை ரசம் நிறம்பியது; பொங்கும் மகிழ்ச்சியுள்ளது. அது இன்பம் ததும்பும் ஊற்று.

தம்பதிகளுக்கு ஒருவரையொருவர் பிரிந்துபோகும் உரிமையுண்டு. இருந்தாலும், வருஷாவருஷம் பிரிந்து போகுதல் குறைந்துகொண்டே வருகிறது. கலியாணஞ் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. 1937ஐ விட 1938 ல் ஒரு லக்ஷம் கலியாணங்கள் அதிகமாக நடந்திருக்கின்றன. இதனால் சோவியத் குடும்ப வாழ்க்கையின் போக்கு ஜனங்களின் மனதைக் கவர்ந்துவிட்டதென நன்கு புலப்படுகிறது.

"அடுப்பங்கரைக்கும், அடுக்கடுக்காக பிள்ளை பெறுவதற்கும், ஆடைஆபரணங்களணிந்து அலங்கரித்துக்கொள்வதற்கும்தான் ஒரு பெண்ணின் பிறப்பு" என்பது பாசிஸ்ட் சித்தாந்தம். "பெண்கள் ஆண்களின் பணியாட்கள்". இது மற்றொரு பாசிஸ்ட் கொள்கை. சோவியத் ரஷ்யாவின் சமுதாயத் திட்டம் இந்தப் படுமோசமான பாசிஸ்ட் பழக்கத்தின் ஜன்ம சத்ரு.

பெற்றோர்களின் பொறுப்பு

சோவியத் ரஷ்யாவில் தாயும் தந்தையும் குழந்தைகளின் க்ஷேமத்திற்கு பொறுப்பாளிகள்—பெற்றோர்களில் ஒருவர் குடும்பத்தைவிட்டுப் பிரிந்துபோனால், அவர் தனது ஊதியத்தில் ஒரு குறிப்பிட்ட பாகத்தை குழந்தைகளுக்கு 18 வயது ஆகும்வரையில் கொடுக்க வேண்டும். ஒரு குழந்தை

யாக இருந்தால் மொத்த ஊதியத்தில் $\frac{1}{4}$ பாகம்; 2 குழந்தைகளுக்கு மூன்றில் ஒரு பாகம்; 2 க்கு மேற்பட்டால் $\frac{1}{2}$ பாகம், இப்பணஉதவியை கொடுக்கத் தவறினல் 2 வருஷம்வரை சிறைதண்டனை விதிக்கப்படலாம்.

குழந்தை வளர்ச்சியில் சர்க்கார் சிரத்தை

ஒரு சமூகத்தில் குழந்தைகளுடையவும், தாய்மார்களுடையவும் நலன்களுக்காக உழைப்பதே மிகச் சிறந்த சேவை. இத்தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது சோவியத் சமுதாயத் திட்டம்.

நர்ஸரிகளும், கிண்டர் கார்டன்களும், பொது உணவு சாலைகளும், ரஷ்யத் தாய்மார்களுக்கு பலவிதத்தில் உபயோகப்பட்டு வருகின்றன. டாக்டர்களைக் கலந்து ஆரோக்கிய முறைகளைக் கையாள பிரத்யேக வசதிகளும் அவர்களுக்கு உண்டு. பிறந்து ஆறுவாரங்களானதும் குழந்தைகளை நர்ஸரிகளுக்கு அனுப்பிவிடலாம். 3 வயதுவரையில் அங்கேயே குழந்தைகள் கவனிக்கப்படும். இக்காலத்திலேற்படும் சகலச் செலவுகளும் சர்க்காரால் கொடுக்கப்பட்டு வருகிறது. மூன்று வயது முதல் ஏழு வயது வரையிலுள்ள குழந்தைகளை கிண்டர் கார்டன்கள் கவனித்து வருகின்றன. இந்தச் செலவில் 3–ல் 2 பாகம் சர்க்காரைச் சேர்ந்தது.

1940–ல் நிரந்தரமாக சதா சர்வகாலமும் திறந்திருக்கக் கூடிய நர்ஸரிகள் தொகை சுமார் 9 லக்ஷம். குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரம் (முக்கியமாக விதை விதைக்கும் காலத்திலும், அறுப்புக்காலத்திலும்) 1941ல் ஏற்பட்டிருந்த நர்ஸரிகளில் 38,57,000 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வந்தன. கிண்டர் கார்டன் ஜார் காலத்தில் ஒன்றுகூட இல்லை. 1940லோ 54 ஆயிரம்; மற்ற ஸ்தாபனங்கள் 23



[illegible]

லக்ஷங் குழந்தைகளை கவனித்து வந்தன. இத்தகைய ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டிருப்பதால் சோவியத் தாய் வேலை பார்க்கச் செல்லும்பொழுது குழந்தையைப் பற்றிய கவலை எதுவுமில்லாமல், நிம்மதியாக சந்தோஷ மனதுடனேயே செல்லுகிறாள்.

குழந்தைகளின் நலனுக்காக சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் இந்த ஸ்தாபனங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு அவசியமான குழந்தைக்கும் தாய்க்கும் உள்ள தொடர்புக்கு பிரதிகூலஞ் செய்வதாக சிலரால் கூறப்படுகிறது. ஆனல் உண்மை என்ன? ஆராய்ந்து பார்க்குமிடத்து இந்த ஸ்தாபனங்கள் தான் சோவியத் தாயின் அநாவசியமான தொந்திரவுகளைப் போக்கி, குழந்தைகளை கவனிப்பதற்கு வேண்டிய அவகாசத்தையும், சக்தியையும், உற்சாகத்தையும் அளிக்கின்றன.

மேலும், நிறைய குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தினர்களுக்கு பிரத்யேக பொருள் உதவியை சர்க்கார் கொடுக்கிறது. ஜார் காலத்திய ரஷ்யத் தாய்க்கு பல குழந்தைகள் பிறந்துவிட்டால் அவளுடைய கஷ்டத்திற்கு ஓரளவில்லை. சோவியத் யூனியனில் அப்படியில்லை. ஆறு குழந்தைகளுக்கு அதிகமாக இருந்தால்' ஒவ்வொரு குழந்தைக்கும் வருஷமொன்றுக்கு 2000 ரூபிள்கள்* வீதம் ஐந்து வருடங்களுக்கு அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. ஒரு தாய்க்கு ஒன்பது குழந்தைகளுக்கு மேல் இருந்தால் அலவன்ஸ் தொகை அதிகம். ஒவ்வொரு குழந்தைக்கும் முதல் வருஷத்தில் 5000 ரூபிள்கள்; பிந்திய 4 வருஷங்களுக்கும் வருடாவருடம் 3000 ரூபிள்கள்.

---

* ரூபிள்: ரஷ்ய நாணயம்—சுமார் $1\frac{1}{3}$ ரூபாய் மதிப்பு.

சோவியத் ரஷ்யாவில் பெரிய குடும்பங்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருகிறது. 1938ல் கொடுக்கப்பட்ட அலவன்ஸ் 92 கோடியே 20 லட்சம் ரூபிள்கள்; 1940ல் 122 கோடியே 50 லட்சம். 1936லிருந்து 1940வரையில் பெரிய குடும்பங்களுக்கு அலவன்ஸாக கொடுக்கப்பட்டது 441 கோடி ரூபிள்கள்.

குழந்தைகளின் பராமரிப்புக்கு பொருளுதவியளிப்பதோடு நின்றுவிடாமல் அதற்கு அத்யாவசியமான அறிவையும் ரஷ்ய தாய்மார்களுக்கு சோவியத் சர்க்கார் புகட்டி வருகிறது. இவ்வறிவு பெற்றேர்களுக்காக நிறுவப்பட்டிருக்கும் கலாசாலைகளில் போதிக்கப்பட்டு வருகிறது.

தாய்களுடையவும், குழந்தைகளுடையவும் ஆரோக்கியத்தை கவனிப்பது சோவியத் சர்க்காரின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. இது சம்பந்தமாக கர்ப்ப ஸ்திரீகளுக்கு அது செய்திருக்கும் ஏற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை. 1940ல் ஒரு லட்சத்து 45 ஆயிரம் படுக்கைகள் அவர்களுக்கு பிரத்யேகமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதாவது ஜார் காலத்தைவிட 21 மடங்கு அதிகம். பிரசவ வைத்தியசாலைகள் நாட்டின் பல பாகங்களிலும் உண்டு. 8 லட்சத்து 30 ஆயிரம் பெண்கள் தங்களது விடுமுறை காலத்தை சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஓய்வு விடுதிகளிலும், சுகாதார வாசஸ்தலங்களிலும் கழித்தனர். சோவியத் தாயின் இன்ப வாழ்க்கைக்கு யாதொரு இடையூறும் வராமல் பாதுகாத்து வருகிறது சோவியத் சர்க்கார். குடும்பம் பெருத்து விடுமோ என்ற பயம் ரஷ்ய பெண்களுக்குக் கிடையாது. சோவியத் மக்களின் மரண-விகிதம் குறைந்து கொண்டே வருகிறது. வருடா வருடம் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையும் மிக அதிகம். அது இன்னும் அதிகரித்து வருவது ஒரு விசேஷமே. 1936ல் பிறந்த குழந்தைகளைவிட 1937ல் 20 சதம் அதிகம்.

VI. கிழக்கே மறு மலர்ச்சி

இதுவரையில் பொதுவாக ரஷ்யப் பெண்களைப் பற்றி பேசி வந்தோம்; ஆனால் ஜார் சக்கரவர்த்தியின் காலனிக ளில், முக்கியமாக மத்திய ஆசியாவிலும், காகஸஸ் பிரதே சத்திலும் பெண்களின் நிலைமை பன்மடங்கு மோசமாக யிருந்தது.

பொது ஸ்தலங்களுக்குக்கூட ஸ்திரீகள் செல்லலாகாது. தெருக்களில் போகும் பொழுது பர்தா போட்டுக்கொள்ள வேண்டும். அண்டைவீட்டு அடுப்பங்கரை விஷயங்கூட அவர்கள் அறியார்கள். ஒரு சிறிய மண் குடிசை. அதுவே அவர்கள் உலகம். அதனுள்ளும் ஆளுக்கு அடிமை. அழ கானதைக் கண்டுகளித்தது கிடையாது. அறிவூட்டும் செய்தி காதில் கிட்டாது. அவர்களின் வாழ்க்கை. அறிவற்ற வாழ்க் கை, அலங்கோல வாழ்க்கை.

இந்த அவலக்ஷண வாழ்க்கைக்கு சாவுமணி அடித்தது சோவியத் புரட்சி. கிழக்கத்திய கன்னிகைகளின் கஷ்டங் கள் மறைந்தன. சுதந்திர தேவிகளாக பிரகாசிக்கின்றனர். இன்று சோவியத் ரஷ்யாவில் சமூகத்தின் பல துறைகளி லும் பணியாற்றி வீரவாழ்வு வாழ்கின்றனர்.

காலத்தை வீணாகக் கழிப்பதில்லை; சந்தர்ப்பங்களை நழுவ விடுவதில்லை; பள்ளிகள், வைத்திய சாலைகள், வயல் கள், தொழிற்சாலைகள், எங்குபார்த்தாலும் பெண்கள். பல்லாயிரக் கணக்கில் பல நாட்டுப் பெண்கள். உஸ்பெக், தாஜிக், துருக்கிமான், காஸக் முதலிய எல்லா மாகாண மாதர்களும் முந்திக்கொண்டனர் சோவியத் சக்தியை அதிகப் படுத்த. தொழிற்சாலைகளிலும், விவசாயப் பகுதியிலும் சிறப்பாக நிர்வாகஞ்செய்து தங்களது சாமார்த்தியத்தைக் காண்பித்து பரிசு பெற்றுள்ளனர். உதாரணமாக அஸர் பெய்ஜான் மாகாணத்தைச் சேர்ந்த பாகிரோவா என்ற

பெண்மணி பருத்தி சாகுபடி சம்பந்தமான விஷயங்களை நன்குணர்ந்து அதிக உற்பத்திக்கான சாதனங்களை கண்டு பிடித்தார். இவரது திறமையை மெச்சி சோவியத் மக்கள் இவரை மத்திய சட்டசபை அங்கத்தினராக தேர்ந்தெடுத்த னர்.

இன்று கிழக்கு சோவியத் யூனியனிலிருக்கும் பெண்கள் பல கலைகளையும் கற்று பல விதங்களில் தாய்நாட்டுக்கு சேவைபுரிகின்றனர். இஞ்சினியர்களாகவும், விஞ்ஞான சாஸ்திரிகளாகவும், டாக்டர்களாவும், உபாத்தியாயினிகளாகவும், விவசாய நிபுணர்களாகவும், சித்திரம் எழுதுவோர்களாகவும், பாடகிகளாகவும் திகழ்கின்றனர். அஜெர்பெய்ஜான் பிரதேசத்தைச் சேர்ந்த கிமார் என்ற பெண்மணி உலகப் பிரசித்திபெற்ற 'பாகு' எண்ணைச்சுரங்கங்களில் ஒரு இஞ்சினியர். மாரியா வார்சிஞ ஒரு குக்கிராமத்தில் பிறந்தவர். 16 வயது வரையில் சரியான படிப்புகிடையாது. அதற்குப் பிறகு கல்விபயின்று M.A. பட்டம் பெற்று ஒரு சர்வகலாசாலையில் ரஸாயன சாஸ்திரம் போதிக்கும் ஆசிரியர் உத்தியோகத்தில் அமர்ந்தார். அந்நிய பாஷைகளைக் கற்ருர். விஞ்ஞானத்துறையில் மேன்மேலும் ஆராய்ச்சி செய்துவருகிருர். நான்கு நூல்களை எழுதியுள்ளார். இவரைப்போல் எவ்வளவோ பெண்கள் கிழக்கு சோவியத் யூனியனில் சிறப்புற்று விளங்குகின்றனர்.

பல்லாண்டுகளாக நீடித்து வந்த கொடுங்கோலாட்சி சோவியத் ஆட்சியின் பயஞல் முறியடிக்கப்பட்டது. ரஷ்ய பெண்ணுலகத்திற்கு புத்துயிர் உண்டாயிற்று. சமூகத்தின் பல துறைகளிலும் பங்கெடுத்துக்கொண்டனர். சோவியத் பெண்கள். ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக சுகவாழ்வு நடத்துகின்றனர்.

VII. பாதுகாப்பு அரணில்

ஜெர்மன், அரக்கர்கள் ரஷ்யாமீது படையெடுத்ததும் சோவியத் பெண்கள் பீதியடையாமல், காலதாமதமின்றி தேசீயப் பாதுகாப்புக்கு ஆயத்தமானர். லக்ஷக் கணக்கில் முதல் சிகிச்சையை கற்றுக்கொண்டனர். ஆகாயவிமானங் களை ஓட்டுவதையும், பாரசூட் மூல்யமாக ஆகாயத்திலி ருந்து கிழிறங்குவதையும் பழகிக்கொண்டனர். யுத்தம் ஆரம் பமாகும் முன்பே சோவியத் ஸ்திரிகள் ஆகாயவிமானங் களில் வெகுதூரம் பறப்பதிலும், மிக உயரமாக பறப்பதி லும் உலகத்திலேயே முதன்மை ஸ்தானம் பெற்றனர். ஆண்களோடு போர்முனைக்குச் சென்றும், ஆண்கள் விட்டுப் போன தொழிற்சாலைகளில் குழுமியும் சோஷலிஸ்ட் ரஷ் யாவுக்கு பணியாற்றி வருகின்றனர்.

தொழில் உற்பத்தி

சோவியத்பெண்கள் தொழில் அரணில் வருவதைப் பற்றியே இவ்வத்தியாயத்தில் கூறப்படும்.

சமாதான காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'துரித பொருள் உற்பத்தி' இயக்கம் இரண்டு மடங்கு வேகமாகச் செல்லத் தொடங்கியது, இவ்வியக்கத்தின் இரு தலைவிகள் ஜே. பிரிஜிணுவும், ஸிம்நோவும், வேலையை துரிதமாகச் செய்வது மாத்திரமல்ல, ஒருவரே பலதரப்பட்ட தொழில் கற்றுக்கொண்டு சமயத்துக்கேற்றவாறு உழைத்துவந்தனர். இதன் பயனாக தொழில் உற்பத்தி குறிப்பிட்ட காலத்திற் குள்ளேயேமுடிந்து வந்துகொண்டிருக்கிறது. நவீன யந்திரங் களைக் கண்டு பிடித்தும் உற்பத்தியைப் பெருக்கிவந்தனர்.

யுத்தம் ஆரம்பித்ததும் எண்ணெய், நிலக்கரி, இரும்புச் சுரங்கங்களிலும், மெஷின்கள், ஆயுதங்கள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலும் ஆள் பஞ்சமுண் டாயிற்று. இப் பஞ்சத்தைப் பறக்கடித்தது ஸோவியத்

பெண்களே. புத்தப் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தொழில் கல்வி பயிற்சி சாலேகளுக்குச் சென்று சுறுசுறுப்பாக படித்து, தேர்ச்சி பெற்று தொழிற்சாலேகளுக்கு சீக்கிரம் திரும்பினர். இத்தகைய ஆற்றலேக் கண்டு உலகமே மெச்சுகின்றது.

பெரும் நதிகளான வால்காவிலும்,எனிஸியிலும் படகு, கட்டுமரங்கள் ஓட்டும் பெண்கள் சுமார் 3500. மாலுமிகளாகவும், இஞ்ஜினியர்களாகவும், கேப்டன்களாகவும் வேலே செய்கிருர்கள். யுத்தம் ஆரம்பித்தபிறகு 40 ஆயிரம் பெண்கள் ரயில்வே தொழிலாளிகளாகச் சேர்ந்திருக்கின்றனர்.

தொழில் செய்வது என்ருல் தேன்குடிப்பது போல ஸோவியத் பெண்களுக்கு; தேசப்பணி என்ருல் துள்ளிக் குதிக்கின்றனர். தேசீயப் பாதுகாப்பிற்காக பகலென்றும் இரவென்றும் பார்க்காமல் நாள்முழுவதும் உழைக்கும் தன்மையுள்ளவர்கள். 'என் கடன் பணி செய்து கிடப்பதே'—இதுதான் அவர்களது ஸ்லோகம். 'அவசியமாளுல் ஆயுதம் தாங்கி போர்க்களம் அடைவோம்'—இதுதான் அவர்களது வீர முழக்கம்.

விவசாயப் பகுதியிலும் பெண்களின் முயற்சி இரட்டிப் பாயிற்று. வீட்டு வேலேகளே கவனித்துவந்த ஸ்திரிகள்கூட விதை விதைக்கும் காலத்திலும், அறுவடை காலத்திலும் வாலண்டியர்களாக சேர்ந்து பலவிதத்தில் உதவிபுரிந்தனர். மாணவிகளும் இவர்களுடன் கலந்துகொண்டனர்.

மற்ற விதங்களில்

செஞ்சேனேக்கு நேரடியான உதவி செய்வதென்ருல் பெண்களுக்கு மிகப்பிரியம். குல்லாய்கள், பூட்ஸுகள், ஸ்டாகிங்ஸ், பனியன்கள் முதலியவற்றை தைக்கின்றனர்.

ஆடைகளை வெளுத்துக் கொடுக்கின்றனர். வெடிமருந்து, ஆயுதங்கள் செய்து ஸப்ளை செய்கிறார்கள். இவ்வளவும் பூமியின்கீழ் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களிலிருந்துகொண்டு செய்யவேண்டு. பல கஷ்டங்களுண்டு. எனினும் துணிவாலும், விடாமுயற்சியாலும் சமாளித்துக் கொள்கின்றனர்.



சோவியத் பெண் விமானிகள்

சோவியத் பெண்படிப்பாளிகள் பெண் பாட்டாளிமக்களுக்கு எவ்விதத்திலும் பின் வாங்கவில்லை. டாக்டர்களும், இஞ்ஜினியர்களும், உபாத்தியாயினிகளும், விவசாய நிபுணர்களும், விஞ்ஞான சாஸ்திரிகளும், சித்திரம் எழுதுவோர்களும், பாடகர்களும், நடிகைகளும், மாணவிகளும் யுத்த முயற்சியில் ஈடுபட்டனர்.

மாஸ்கோ, லெனின்கிராட், ஸ்டாலின்கிராட் முதலிய நகரங்கள் முற்றுகை செய்யப்பட்டபொழுது பெண்கள், மண்வெட்டி, கோடறி கடப்பாறைகளின் உதவியால் பாஸிஸ்ட் வெறியர்கள் முன்னேறுவதைத் தடுத்து செஞ்சேனையின் சிரமத்தை குறைத்ததை மறக்கமுடியாது. காட்டிற்குச் சென்று மரங்கள் வெட்டி பொதுமக்களுக்கு விறகு ஸப்ளை செய்தனர். யுத்தகளத்தில் காயமடைந்த ஸோல்ஜர்களுக்

கும், காப்டன்களுக்கும் இரத்ததானம் அளித்தனர். விரோதிகளின் குண்டுவீச்சினுல் பெற்றோர்களை இழுந்த எல்லா குழந்தைகளையும் ஸ்வீகாரஞ் செய்துகொண்டனர். விமான படையெடுப்புக் காலங்களில் துரிதமாகவும், நன்ருகக் கவனித்தும் வைத்திய சிகிச்சை செய்கிருர்கள்; பொதுக் கட்டிடங்களையும், வீடுகளையும், தொழிற்சாலைகளையும் தீப்பற்றி எரியாதவண்ணம் பாதுகாத்து வருகின்றனர்; ஜனங்களிடையே குழப்பம் நேரிடாதவாறு பார்த்துக்கொள்கின்றனர்

சோவியத் தாய்மார்கள் போர்முனைக்குச் செல்லும் தனது புத்திரர்களுக்குக்கூறும் பொன் மொழிகளைக் கேளுங்கள்:—"மகனே, சுதந்திரமில்லேயேல் உனக்கு வாழ்வில்லை. உனது வாழ்க்கைக்கு ஆதாரம் உனது தேசம். இதை மனத்தில் கொள்வாயாக. வீர புருஷனுய் யுத்தத்திற்குச் சென்று வா; என்னைப்பற்றிய கவலைவேண்டாம். செஞ்சேனையின் வெற்றியே எனது லக்ஷியம்."

இவ்வீரப் பெண்மணிகளை பெற்றெடுத்த சோவியத் ரஷ்யாவின் வெற்றிக்கு ஐயமுண்டோ!

VIII. போர்க்களத்தில்

சோவியத் பெண்களின் நிலை மிக உன்னதமானது. பல உரிமைகள், பல சுகங்கள். ஆனுல் அதற்குத் தகுந்த பொறுப்புமுண்டு. அதை மனமுவந்து அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் களிப்புடன் வரவேற்று அதை நிறைவேற்றுகின்றனர். ஆண்களுடன் சம அந்தஸ்தை அடைந்தனர். ஆகவே ஆண்களுக்குள்ள கஷ்ட நஷ்டங்களையும், அபாயங்களையும் பங்கிட்டுக் கொள்ள அவர்கள் தயார். தொழிற் சாலைகளினின்றும்

யுத்த களத்திற்கு ஏகினர் ஆண்மக்கள். பெண்கள் உடனே தொழில் உற்பத்தியை சரிவர நடத்த ஆயுதசாலைகளுக்கும் சுரங்கங்களுக்கும், மெஷின் உற்பத்தி ஆலைகளுக்கும் விரைந்தனர். சுதந்திரப்போரில் ரஷ்ய ஆண்கள் வீரச்சாவு பெற்றால், காலியான ஸ்தானத்தை பூர்த்தி செய்ய, சோவியத் பெண்கள் கொஞ்சமும் தயங்காமல் யுத்த களத்திற்கு வீர முழக்கத்துடன் செல்கின்றனர். போர்முனையில் அவர்கள் பால் காணப்படும் மனோதிடம், விடாமுயற்சி உற்சாகம் தைரியம், தியாகம் முதலியவற்றைப் பற்றியே இப்பொழுது கவனிக்கப்படும்,


யுத்த முனையில் சோவியத் பெண்கள் செய்துவரும் சேவையை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம் (1) வைத்திய சிகிச்சை அளித்தல் (2) ஆயுதம் ஏந்தி சத்ருக்களுடன் போரிடுவது (3) விரோதிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் கொரில்லா சண்டையிடுவது.

நர்ஸ்களின் தீரம்

எதிரிகளின் விமானங்களையும், பீரங்கிகளையும் லட்சியம் செய்யாமல் செஞ்சேனை வீரர்களுக்கு ஸோவியத்நர்ஸுகள் வைத்திய சிகிச்சை அளிக்கும் காட்சி எவரும் மறக்க முடியாத காட்சியாகும். கவனியுங்கள் கோர யுத்தத்தில் பெண்களின் தீரத்தை. உயிர் திரண மாத்திரம். தேசமே பெரிது. பாருங்கள், ரீல் ரீலாக.

ரீல் நெ. 1 :—சத்ருவிடம் சிக்குண்ட ஒரு ரஷ்யப் பிரதேசம். அங்கு குத்துயிராகக் கிடக்கும் செஞ்சேனை சிப்பாய்கள் ஐவர். நர்ஸ் பாவ்லோவா(Pavlova) இச்செய்தியை அறிகிருள். ஊர்ந்துபோகிருள். $2\frac{1}{2}$ மைல் தூரம். தன் முதுகின் மேல் ஒருவரை படுக்க வைத்துக்கொண்டு சோவியத் அரணை

நோக்கி மறுபடியும் ஊர்ந்து செல்லுகிருள். அங்கே அவரை பத்திரமான இடத்தில் ஒப்பிவித்து விட்டு திரும்பவும் எதிரிகள் இருப்பிடத்திற்குச் சென்று ஒருவரை எடுத்து வருகிருள். இவ்விதமாக அந்த ஐந்து ஆண்களின் உயிரையும், கௌரவத்தையும் காப்பாற்றுகிருள் அந்த சோவியத் மாது.



காயமடைந்த செஞ்சேவன வீரவன
போர்க்களத்திலிருந்து அப்புறப்படுத்துகிருள் ஒரு நர்ஸ்!

ரீல் நெ 2:—'படார், படாரென்று' விரோதிகளின் பீரங்கிகள் கர்ஜிக்கின்றன. ஒரு சோவியத் லாரி திப்பற்றி எரிகிறது. அதிலிருக்கும் சோவியத் வீரர்கள் தத்தளிக்கின்ற

னர். காண்கிருள் இதை நர்ஸ் டமாரா(Tamara) வயது பதி னேழுதான். அதனுள் பாய்கிருள்; 15 தோழர்களை அக்னி ஜ்வாலையிலிருந்து அப்புறப்படுத்துகிருள். ரணமாய் விட்டது அவள் உடம்பு முழுவதும்.

ரீல் நெ. 3:—ஸெபாஸ்டபூல் போர்க்களம். காயமடைந்த 21 சோவியத் ஸோல்ஜர்களை படுகொலை செய்வதற்காக 13 நாஜி வெறியர்கள் சூழ்ந்து கொள்கின்றனர். யுவதி மாரியா (Maria) கவனிக்கிருள் இதை. தந்திரமாக போரிடுகிருள். தப்பிவிக்கிருள் தனது சகாக்களை.

ரீல் நெ. 4:—மற்ரெரு ஸெபாஸ்டபூல் வீரப் பெண். இம்மாதின் பெயர் மாலெங்கோ(Malenko)ஆபத்து நிறைந்த இடம். எந்தக்கணத்திலும் குண்டுக்கு இரையாகலாம். ஆனல் அசைகிருளில்லை அவளிடத்தை விட்டு. பல இரவுகள், பல பகல்கள் கழிகின்றன. இன்னும் அங்கேயே இருக்கிருள். ஏன்! 300 செஞ்சேனை வீரர்களுக்கு நேரிடக் கூடிய பேரா பத்தை தவிர்ப்பதற்காக.

ரீல் நெ. 5:–செஞ்சிலுவை நர்ஸ் எலிஞ(Elena.) சோவி யத் மக்களின் 20கோடி மக்களும் இவளை நன்கறிவார்கள். போர் முனையில் காயமடைகிருள். ஆனல் போகவில்லை. அவ்விடத்தை விட்டு புறப்பட்ட 200 தோழர்களுக்கு 'ட்ரெஸ்' பண்ணுகிருள்; 20 நபர்களை பத்திரமான விடத்திற்குக் கொண்டுபோய் சேர்க்கிருள் :—

மற்ரெரு ஸீன்: அங்கேயும் எலிஞ (Elena) தோன்றுகி ருள், தலைவனுக்கு படுகாயம். உடனே அவனை வேரிடத்திற்கு எடுத்துச் செல்லுகிருள். அவன் பதவியைத் தான் ஏற்றுக் கொண்டு போரை நடத்துகிருள். இப்பொழுது புதிதாக மறு படியும் காயமடைகிருள். கடைசியாக இவளது தலைமையில் ஜெர்மனியின் ஆதிக்கத்திலிருந்த ஒரு சோவியத் கிராமம்

கைப்பற்றப்படுகிறது. இவளது வீரத்தையும் தியாகத்தையும் மெச்சி சோவியத் அரசாங்கம் பட்டங்களை வழங்குகிறது.

ரீல் நே. 6 காயமடைந்த ரஷ்ய சிப்பாய்கள் ஒரு ரயிலில் போகின்றனர். அவர்களை கவனித்துவர ஆறு நர்ஸ்கள். நர்ஸுகளின் தலைவி ஜவோரோன்கோவா (Zhovoronkova). திடீரென்று எதிரியின் தாக்குதலால் ரயில் பாதை அறுபட்டு போகிறது. என் செய்வாள் தலைவி? ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருகிறாள். இரவும் பகலும் அவளே பாதுகாக்கிறாள். கழிகின்றன மூன்று நாட்கள்; உணவுப்பொருளும் காலியாய் விடுகிறது. பக்கத்து கிராமங்களுக்குச் சென்று அங்குள்ளவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்கிறாள். உடனேயே பால், பழம், ரொட்டி, முதலியவை ரயிலுக்கு வந்து குவிகின்றன. சாப்பாட்டுப் பிரச்னை தீருகிறது. துணைக்கு ஒரு தோழியை அழைத்துக்கொண்டு செல்லுகிறாள். காடுகள் மார்க்கமாக சோவியத் துருப்புகளைத் தேடி, ஆகாயத்திலிருந்து எதிரி விமானங்கள் குண்டுமாரிப் பொழிகின்றன. இருந்தாலும் வெற்றிபெறுகிறாள். அவளது வேலையில் இதன் பயனாக ரஷ்ய லாரிகள் ஆஸ்பத்திரி ரயிலை நோக்கி விரைகின்றன. ஆகவே எல்லா நண்பர்களும் காப்பற்றப் படுகின்றனர்.

நேருக்கு நேர்

ஸெபாஸ்டபோல், ஸ்டாலின்கிராட் அரங்கங்களில் போரிட்ட பெண் சிப்பாய்களே மிக கீர்த்தி வாய்ந்தவர்கள். இவர்களில் லூட்மிலா பவிலிசென்கோ (Ludmilla) வின் சரித்திரத்தை கவனிப்போம். இவள் சமாதான காலத்திலேயே ராணுவப்பயிற்சி பெற்றவள். தனது சாமர்த்தி

யத்தை ஒடெஸ்ஸாவிலும், ஸெபாஸ்டபூலிலும் காண்பித்தாள். இவளது குறி தவறவே தவறாது. அஞ்சா நெஞ்சுடையவள், இவளது பெயரைக் கேட்டாலே ஜெர்மனிய ஸோல்ஜர்களுக்கு நடுக்கம். பிரதி தினமும் இவள் எதிரிகளில் சிலரை சுட்டு வீழ்த்திவந்தாள். ஜூலை 1942க்குள் 309 விரோதிகளைக் கொன்றுவிட்டாள். சோவியத் சர்க்கார் இவளுக்கு பல பட்டங்களை வழங்கியது.

நீனா (Nina). இவள் பீரங்கிகளை உபயோகிப்பதில் மிக தேர்ச்சி பெற்றவள். தனது ராணுவ வாழ்க்கையை ஒடெஸ்ஸாவில் ஆரம்பித்தாள். ஸெபாஸ்டபூல் அரங்கத்தில் அழியாப் புகழ் பெற்றாள். தற்காப்புப்போரிலும் எதிர்த்துப் போராடுவதிலும் இவளது திறமை நன்கு விளங்கிற்று. 500 எதிரிகளுக்குமேல் இவளது கையில் சிக்கி மாண்டனர். சோஷலிஸ்ட் ரஷ்யாவே இன்று இவளை போற்றுகிறது. ஸெபாஸ்டபூல் அரங்கத்தில் மாரியா பாய்டா (Maria Baida)வின் சேவை மிகமுக்யமானது. முதல் உதவி சிகிச்சைப்பகுதியில் இவள் முதன் முதலாகச் சேர்ந்தாள். பிறகு துப்பாக்கி ஏந்தி செஞ்சேனைப் படையில் ஒரு சிப்பாய்



சோவியத் கோரில்லாப் பெண் கை குண்டை வீசுகிறாள்!

ஆனுள். போரின் கொடுமை அதிகரித்தது. பாய்டா (Baida) வும் அவளது தோழர்களும் விரோதிகளால் சூழ்ந்துகொள்ளப்பட்டனர். தப்பித்துக்கொள்ளும்பொருட்டு 20 ஜெர்மானியரை சுட்டுத் தள்ளினுள்; துப்பாக்கியில் மருந்து தீர்ந்து போய்விட்டது. ஆகவே ஒரு சுரங்கத்தின் வழியாகச் சென்று வெடிமருந்துகளை எடுத்துவந்தாள். வரும் வழியில் காயமடைந்த ஒரு தோழனைக்கண்டாள். அவசர அவசரமாக அவனுக்கு முதல் உதவி சிகிச்சை அளித்து, வேகமாகத் தனது இருப்பிடத்திற்குத் திரும்பினுள். கொஞ்சதூரம் போனதும் அடிபட்ட ஒரு செஞ்சேனைவீரன் நான்கு எதிரிகளின் கைகளில் அகப்பட்டு அவஸ்தைப் படுவதைப் பார்த்தாள். மனம் சகிக்கவில்லை. உடனேயே அந்த நால்வரும் இவளது துப்பாக்கிக்கு இரையானுர்கள். சோவியத் வீரனைக் காப்பாற்றி ஒரு ஜாக்கிரதையான இடத்தில் சேர்த்துவிட்டு விரைந்தாள் போர்முனைக்கு. பாய்டா (Baida) வுக்கு ஆபத்து வந்துவிட்டது. தலையிலும் கரத்திலும் காயம்பட்டது. ஆனுல் போர்முனையைவிட்டு அசையவில்லை. மருந்து தீரும்வரை மறுபடியும் சுட்டாள். இப்பொழுது காயமடைந்தாள் மூன்ருவது தடவையாக. இதையும் பொருட்படுத்தாமல் சுரங்கத்தின் வழியாகச் சென்று மருந்து எடுத்துவந்தாள். வழியில் கண்ட நான்கு விரோதிகளை பலியிட்டாள். போனுள் தனது தோழர்களிடம். இராப்பொழுது வந்தது. சண்டையும் சற்று ஓய்ந்தது. தனது கூட்டத்தினரை ஒன்ருகச் சேர்த்தாள். பெரும்பான்மையோருக்கு காயம்பட்டிருந்ததால் அவர்களுக்கு சிகிச்சை செய்தாள். திரும்பிச் செல்லும் பாதையோ எதிரியின் ஆதிக்கத்திலிருந்தது. பயப்படவில்லை நமது பாய்டா(Baida.)பத்திரமாக எல்லோரையும் தனது தலைமையில் வழிநடத்திச்சென்று சோவியத் சேனையுடன் கலந்துகொண்டாள். பாய்டாவுக்கு ஜே! பாய்டா நீடூழி வாழ்க!

எல்லா ஸோவியத் போர்முனைகளிலும் பாய்டாவைப் போல் பல பெண்மணிகள். அவர்களின் வீரச் செயல் களையும், தியாக புத்தியையும் உலகமக்கள் மறக்க முடியுமா?

ஸ்டாலின்கிராட் போர்முனை. ஒரு ரஷ்யப் பெண்மணி கைதியாக்கப்பட்டு சோவியத் ராணுவ ரகஸியங்களை வெளியிடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டாள். சற்று யோசித்தாள். 'சரி' எனக்கூறி ஜெர்மானியரை சோவியத் துருப்புகள் ஒளிந்திருந்த ஒரு வீட்டிற்கு எதிரே அழைத்துச் சென்று, "தோழர்களே, சுடுங்கள், சுடுங்கள்" என உரக்கக் கூவினாள். உடனேயே சோவியத் துருப்புகள் சுட்டனர். பல விரோதிகள் மாண்டனர். சோவியத் பெண்மணியும் சுட்டுக் கொல்லப்பட்டாள். சாகும் தருவாயில் அவள் சொன்னாள். "அவர்களை (சத்ருக்களை) சரியான இடத்திற்குத்தான் அழைத்து வந்தேன்" விரோதிகளை கொல்லும்பொருட்டு தனது உயிரையே மாய்த்தாள் இப்பெண்மணி. என்னே, இவள் தேசபக்தி!

சோவியத் பெண்களின் தேசபக்தியையும் தியாகத்தையும் எதிரிகளே புகழ்ந்திருக்கின்றனர். படியுங்கள் கீழே கூறியிருப்பதை. ரஷ்யப் போர்முனையில் கொல்லப்பட்ட ஒரு ராணுவ உத்தியோகஸ்தரின் டையரியில் எழுதப்பட்டிருந்ததாவது:—

"நோவோகிராட் நகரத்தின் பல பாகங்களையும் சுற்றிப்பார்த்தோம். அப்பொழுது எங்களது காலாட்படை இடிந்து விழுந்த கட்டிடங்கள் நடுவே ஒரு சோவியத் பெண் சோல்ஜரை கண்டுபிடித்தது. அவளது துப்பாக்கியைப் பிடுங்கிய தருணத்தில் அவள் அப்படையின் ஆபீஸர்மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தாள். மூன்று விரோதிகள் அவளை

பலமாகத் தாக்கினபிறகுதான் அவள் அந்த ஆபீஸரை விட்டாள். ராணுவ ரகஸியங்களை அறிவதற்காக பல கேள்விகள் கேட்கப்பட்டன. அப்பெண்மணி வாயைத் திறக்கவேயில்லை. தூக்கு மேடைக்குச் சென்றாள் புன்முறுவலுடன். சாவைப் பரிகசித்தாள் புன் சிரிப்பு சிரித்து.''

கொரில்லா சண்டை

ஜெர்மானியர்களால் ஆக்கிரமிக்கப் பட்ட ரஷ்யப் பிரதேசங்களில் சோவியத் பெண்கள் காட்டிவரும் போராவேசம் ரஷ்ய யுத்த சரித்திரத்திலேயே முதன்மைஸ்தானம் பெற்றுவிட்டது. எதிரிகளைப் பல விதத்திலும் துன்புறுத்துவதற்காகவே கொரில்லாப்போரை கையாண்டுவருகின்றனர். கொரில்லா சண்டையில் அபாயங்களும் கஷ்டங்களும் அதிகம். ஆனால் இவைகளை சோவியத் பெண்கள் பொருட்படுத்தவில்லை. விரோதிகள் கையில் சிக்குண்ட பிரதேசங்களிலிருந்து இவர்கள் காடுகளுக்கு ஓடிச்சென்று, மலையடிவாரங்களில் மறைந்து வசித்து, கொரில்லாப் போரை நடத்திவருகின்றனர்.

இப்போரில் சோவியத் பெண்கள் ஸ்கௌட்டுகளாகவும், நர்ஸ்களாகவும், சிப்பாய்களாகவும் உதவிவருகின்றனர். அடிபட்டவர்களை அப்புறப்படுத்தியும், ஆயுதங்கள் சப்ளை செய்தும், உணவுப் பொருள்கள் அளித்தும் தாய் நாட்டிற்கு பாடுபட்டுவருகிறார்கள்.

ஜோயா இந்த கொரில்லா சண்டையில் அழியாப் புகழ்பெற்றுவிட்டாள். யுத்த ஆரம்பத்திற்கு முன்பு ஒரு உயர்தரப் பாடசாலையில் கல்வி பயின்று வந்தாள். கொரில்லாப்படையில் சேரும்பொழுது வயது 18 தான். டான்யா என்ற புனைப்பெயருடன் போரிட்டு வந்தாள். 1942 டிசம்ப

ரில் ஜெர்மானியர் இவளை கைதியாக்கினார்கள். அவர்கள் இவளை பல கேள்விகள் கேட்டனர். டான்யா வாயைத் திறக்கவில்லை. ஆகவே இவளை விரோதிகள் சித்ரவதை செய்தனர். கடும்பனியில் இடுப்புக்குமேல், எவ்வித ஆடையு மின்றி தெருத்தெருவாக அழைத்துச் செல்லப்பட்டாள். அடி மேல் அடியாக விழுந்தது. இவ்வளவு துன்பங்களிருந்த போதிலும் டான்யா ரஷ்யாவை காட்டிக்கொடுக்கவில்லை. இதைக் கண்டதும் எதிரிகள் ஆத்திரமடைந்து, பல கூட்டுப் பண்ணைத் தொழிலாளிகள்முன் இவளை தூக்கிலிட்டனர். அப்பொழுது அவள் கூறினாள்:—

"தோழர்களே, எனக்காக நீங்கள் ஏன் கவலைப்படு கிறீர்கள்? தைர்யமாக இருங்கள். விரோதிகளை வேட்டை யாடுங்கள், சுட்டு வீழ்த்துங்கள். நான் சாவைக்கண்டு அஞ்ச வில்லை. தாய் நாட்டுக்காக உயிர்துறப்பதைபற்றி சந்தோஷப் படுகிறேன்; ஆனால் நீங்கள் யுத்தத்தை தொடர்ந்தாற்போல் நடத்துங்கள். பயப்படாதீர்கள்! ஸ்டாலின் இருக்கிறார். விரோதிகளை சீக்கிரம் அவர் முறியடிப்பார்!"

இவ்வீர மொழிகளைக் கேட்ட அத்தொழிலாளிகள் கண் ணீர் விட்டனர்.

டான்யாவைப்போல் மற்றொரு பெண்மணி அலெக் ஸாண்ட்ரா. இவளிடத்திலிருந்து ஒரு கொரில்லா படையின் விஷயங்களை அறியும் பொருட்டு ஜெர்மானிய காட்டுமிராண் டிகள் இவளது இளம் மகனை இவள் எதிரிலேயே படுகொலை செய்தனர். பிறகு இந்த சோவியத் தாய் சித்ரவதை செய் யப்பட்டாள். ஒன்றும் பலிக்கவில்லை. எதிரிகள் வாயில் விரலை வைத்துக்கொண்டனர். 'தனையனைவிட தாய்நாடு பெரிது' என்பதே இவளது நோக்கம்.

டான்யா, அலெக்ஸாண்ட்ராவைப்போல் பல சோவி

யத் பெண்கள் தாய் நாட்டின் கௌரவத்தைக் காப்பற்ற தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர். இன்னும் ஆயிரக் கணக்கான இத்தகைய மாதர்களிருக்கின்றனர். ஆகவே ரஷ்யா வெற்றியடையுமென்பது திண்ணம்.

சோவியத் பெண்கள் செஞ்சேனை வீரர்களுக்கு எவ்வி தத்திலும் தாழ்ந்தவர்களல்ல; தீரத்திலும் சரி, தியாக புத்தி யிலும் சரி. 'ஆள் பலம் குன்றி விட்டதனால் பல பெண்கள் போர்க்களத்துக்கு செல்லுகின்றனர்' என்று விரோதிகள் அர்த்தமற்ற பொய்க் கூச்சலைக் கிளப்புகின்றனர். உண்மை அதுவல்ல. சமீப காலத்தில் ஏற்பட்டுவரும் சோவியத் எதிர் தாக்குதல்களுக்கு ஆள்பலக் குறைவா காரணம்? யோசித்துப் பார்க்கட்டும். போர்முனையிலிருக்கும் பெண் கள் மாத்திரம்தான் போரிடுவார்கள் என்று நினைத்து ஏமாந்து போகவேண்டாம். அவசியமானால், சோவியத் பெண்ணுலகமே, திரண்டு போர்க்களத்துக்குப் போகத் தயார். எதிரிகள் இதைக் கேட்டு நடுங்கட்டும். சோவியத் பெண்களின்படி அளவிலா சக்திக்கு இதுவே மூல காரணம்.

IX. ஐக்கிய பாஸிஸ்ட் எதிர்ப்பு முன்னணியில்

பாஸிஸ்ட் எதிர்ப்பு ஏன்?

சோவியத் மாதர்களின் போராட்டம் அவர்களது குடும் பங்களையும் தாய்நாட்டையும் மாத்திரம் காப்பாற்றுவதற் காக அல்ல; அகில உலகப் பெண்மக்களின் நன்மையை உத்தேசித்தும், உலக நாகரிகத்தை பாஸிஸ்ட் காட்டுமிராண்

டித்தனத்திலிருந்து மீட்கவும் தான் அவர்கள் இன்று போராடி வருகின்றனர். கொழுந்துவிட்டு எரியும் தேசபக்தியின் முழு பலத்துடன் சுதந்திரப் போரை நடத்துகிறுர்கள் என்பது உண்மைதான். ஆனல் அது முழு உண்மையல்ல. நாஜி அக்கிரமத்தை எதிர்த்துவரும் சுதந்திர வாஞ்சையுள்ள நாடுகளுக்கு உதவி செய்வதே அவர்களின் முக்கிய நோக்கம்.

பாஸிஸத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் அடிமை வாழ்க்கையும், கொடுமையும் தலைவிரித்தாடுகின்றன. ஹிட்லர் வீசிய குண்டுகள் நேச நாடுகளின் கிராமங்களையும் நகரங்களையும் நிர்மூலமாக்கிவிட்டன. ஸ்லோவேனிக் (Slavonic) இனத்தைச் சேர்ந்த மக்களை ஆயிரக் கணக்கில் கொன்று வருகிறுன் ஹிட்லர். ஆதரவற்ற, நிராயுதபாணிகளான குழந்தைகளையும், ஸ்திரீகளையும், வயது முதிர்ந்தவர்களையும் படுகொலை செய்கிறுன் அந்தப் பாவி.

ஹிட்லரையும் அவனது கும்பலையும் அழித்துத் தலைமுழுகி பாஸிஸத்தை படுகுழியில் புதைத்தால்தான் உலகில் சமாதானமும், சந்தோஷமும் நிலவுமென உலக சுதந்திர பெண் மக்கள் அறிவார்கள். ஹிட்லரால் நசுக்கப்பட்டுவரும் பெண் மக்களை விடுவிக்கும்பொருட்டு பிரிட்டிஷ், அமெரிக்க, சீனமாதர்கள் பாஸிஸ்ட் எதிர்ப்பு முன்னணியில் காணப்படுவது மெச்சத்தக்கவிஷயமே. ஆனல் இதுமாத்திரம் போதாது.

இப்பொழுது பாஸிஸ்டு—எதிர்ப்புப் போர் நெருக்கடியான கட்டத்திலிருப்பதினுல் ஜனநாயக நாடுகளின் பெண் மக்களிடையே ஐக்கிய மனோபாவமும், ஒரு முகப்பட்ட செயலும் தோன்றுவது மிக அவசியம்.

உலகப் பெண்களுக்கு விண்ணப்பம்

ஆகவே, 1942ம் வருடம் மேமாதம் 10ம் தேதி மாஸ்

கோவில் நடந்தேறிய அகில சோவியத் மாதர்கள் மகாநாடு, உலகப் பெண்மக்களுக்கு கிழ்க்கண்ட விண்ணப்பத்தை விடுத்தது.—

"சுதந்திர வாஞ்சையுள்ள உலகப் பெண்மணிகளே! என்றும் காணப்படாத ஐக்கியம் நம்மிடையே இன்று ஏற்படுதல்வேண்டும். இரத்தவெறி பிடித்த ஹிட்லரிஸத்தை முறியடிக்கும் இறுதிப் போராட்டத்தில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம், இந்தத் தருணத்தில் தோளோடு தோள் நின்று எங்களுக்கு உதவிபுரியுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். உங்களது எதிர்காலமும் எங்களது போர்க்களத்தில் நிச்சயிக்கப்படுகிறதென்பதை ஞாபகப்படுத்திக் கொள்வீர்களாக.

"சமாதானத்தை விரும்பும் ஒவ்வொருவரும் பாஸிஸத்தை எதிர்க்க அணிவகுத்து நிற்கவும். குழந்தைகளின் நலத்தைக் கோரும் தாய்மார்கள் குழந்தைகளை படுகொலை செய்யும் கொலைபாதகர்களை பழிவாங்க முன்வரவும்.

"அதிக விமானங்கள், அதிக டாங்குகள், அதிக பீரங்கிகள் வேண்டும். உலகத்தையே விழுங்குவதற்கு திட்டம் போடும் நாஜி ராக்ஷஸர்களை அடியோடு அழித்திட அதிகக் குண்டுகள் தேவை.

"ஜெர்மனியின் ஆக்ரமிப்பில் சிக்கியுள்ள பெண்மணிகளே! துப்பாக்கியை தூக்குங்கள். ஆயுதகோலமாக அணிவகுத்து நில்லுங்கள். உங்களது அடிமைச் சங்கலி தகர்க்கப்படும் காலம் நெருங்கிவிட்டது. வெற்றியை விரும்பினால் இப்பொழுதே கொரில்லாப்போரை துவக்குங்கள். ஹிட்லர் கும்பலை ஹதஞ்செய்யுங்கள், அவர்களது பொருள்களை நாசமாக்குங்கள். உங்கள் நாட்டு ஆண்களை அந்த கொள்ளை கூட்டத்தினரோடு சேராதவண்ணம் தடுத்துதவுங்கள்.

"ஜெர்மன் நாட்டு மாதர்களே! போக்கிரி ஹிட்லரின் இன்றைய ஆட்சியினால் உங்களுக்கு நாளை நேரிடும் கதியை சிந்தித்தீர்களா! ஹிட்லர்-கோயரிங் சுய நலக் கும்பலை கவிழ்த்து விடுங்கள். போர்க்களத்துக்குச் செல்லும் ஜெர்மன் துருப்புகளை வழிமறியுங்கள். யுத்த உற்பத்தியை சீர்குலைத்து விடுங்கள்.

"உலகப் பெண்மக்களே! ஹிட்லரை முறியடிக்க முன் வாருங்கள். வெற்றியை விரும்பினால் உங்களது கடமையை நீங்கள் செய்யுங்கள் வெற்றி என்பது தானாக வராது; அதற்காக நாம் பாடுபடுதல் அவசியம்.

"உலகம் முழுவதும் பாசிஸ்ட் எதிர்ப்பு முன்னணியைப் பலப்படுத்துங்கள்".

X. வாழ்க்கைச் சித்தாந்தம்

கடைசியாக, "சோவியத் பெண்களின் வாழ்க்கை சித்தாந்தம் என்ன!" என்ற பிரச்னை எழலாம். இதற்கு சோவியத் யூனியனின் மத்திய சட்டசபை அங்கத்தினரும், பிரக்கியாதிபெற்ற பாடகி வலேரியா பார்சோவாவே பதில் கூறுகிறாள், கேளுங்கள்:

"எந்நாட்டின் பொதுமக்களின் லக்ஷியமே எனது லக்ஷியம். என்னிடம் சிறந்து விளங்கும் சக்தியான சங்கீத ஞானத்தை என் தாய்நாட்டிற்கு அளிக்கிறேன்; இதற்குப் பிரதி உபகாரமாக அதன் விலை மதிப்பில்லா சக்தியை— அதாவது, அழகும், நவீனமும் பொருந்திய ஓர் உன்னத வாழ்கையை சிருஷ்டிப்பதில் அது காட்டிடும் உற்சாகத்தை—

நான் கிரஹித்துக்கொள்கிறேன். சங்கீத உலகில் நான் அடைந்திருக்கும் வெற்றிக்குக் காரணம் என் தாய்நாட்டின் சோஷியலிஸ்ட் வாழ்க்கையே யாகும்."

பாசிஸம் ஒழிக!

ஹிட்லர் வீழ்க!

சோவியத் பெண்கள் நீடூழி வாழ்க!

உலகப் பெண்களின் அடிமைத்தளை ஒழிக!



சோவியத் தேர்தல்: பெண்கள் ஓட் போடுகின்றனர்.



சோவியத் தேர்தல்; பெண்கள் விவாதிக்கின்றனர்.

சோவியத் நாட்டில்

தேசிய இனங்கள்

இன்று, பாசிஸத்தை எதிர்த்து தீவிரமாகப் போர் புரிந்து வரும் நிலைமையில், சோவியத் யூனியனிலுள்ள 16 தேசியக் குடியரசுகளும் தங்களிஷ்டப்படியே பார்லிமெண்டில் செய்த தீர்மானத்திற்கிணங்க பூரண சுதந்திரக் குடியரசுகளாகிவிட்டன. 1917 புரட்சிக்குப்பின் படிப்படியாக வளர்ந்து வந்து இன்றுள்ள நிலைமையை சோவியத் குடியரசுகள் அடைந்துள்ளன. இதைப்பற்றி விரிவாக மேற்சொன்ன புத்தகத்தில் காணலாம். எதிர்பாருங்கள்.

ஜனசக்தி பிரசுராலயம்